# பொருளடக்கம்


1. ப்ரியா என்னை பிரியாதே 5

2. உயிரே... உயிரே... 80

3. நான் நானல்ல 144


# ப்ரியா என்னை பிரியாதே

## 1

'புதிர்கள் நிரம்பியது இவ்வுலகம். எண்கணிதம், நட்சத்திர சாஸ்திரமும் அதில் மிகப்புதிரானவை. சக எண் கொண்டவர்களோ, இல்லை சக நட்சத்திரமுடையவர்களோ எங்காவது ஒரு புள்ளியில் சந்தித்து கொண்டால் அவர்கள் சந்திப்பு தொண்ணூறு சதம் நல்ல நட்பு, கல்யாண உறவு என்று விரிவடைகிறது. நம் வாழ்நாளில் நாம் மிக நேசிக்கும் நாம் சந்தித்தேயிராத மனிதர்கள் கூட நம் எண்ணோடும், நட்சத்திரமோடும் ஒத்துப்போவது ஒரு மிகப் பெரிய அதிசயம்!'

-ஜோதிட ஆராய்ச்சி நிபுணர் ஆராவமுத ஐய்யங்கார்.

அற்புதமான காலை பொழுது!

மார்கழி வானம் பனியை உதுப்பிக் கொண்டிருக்கிறது. கிழக்குச் சூரியன் ஜீராவில் நனைந்த குலோப் ஜாமூனாக செம்மஞ்சளில் டாலடிக்கிறான்.

மரத்துப் பறவைகள் விதவிதமான அரட்டையில் ஈடுபட்டிருக்கின்றன. குளித்து முடித்து ஈரம் சொட்டும் தலையை அள்ளி முடியாதபடி நுனி பாகத்தில் ஒரு ரப்பர் பாண்ட் மட்டும் போட்டு கட்டிக் கொண்டு மாடிப்படி இறங்குகிறாள் ப்ரியா. காலில் சலங்கை கொஞ்சுகிறது.

மணி எழுதான் ஆகிறது.

ஹாலில் ஹிண்டுவை மேய்ந்து கொண்டிருக்கும் சோமநாதன் சலங்கை சப்தம் கேட்டு திரும்புகிறார்.

எதிரில் மகள்.

தேவதை ரூபத்தில்... லட்சுமிகடாட்சத்தில்...!

அவர் முகத்தில் க்ஷணத்தில் மாறுதல்கள். பரவச மின்னல்கள்.

"எங்கடா கோவிலுக்கா?

"ஆமாம்ப்பா..."

"டிரைவர்..." -உட்கார்ந்த இடத்தில் இருந்தபடியே உச்சஸ்தாயியில் குரல் கொடுக்கிறார்.

ஓடிவருகிறான் டிரைவர் சீனிப்பாண்டி.

"நீ போப்பா... நானே இன்னிக்கு கார் ஓட்டப்போறேன்" என்று அவனை கத்தரிக்கிறாள் ப்ரியா.

"நோ... நோ... நீ ஓட்டக் கூடாது. ஒருத்தருக்கு நாலு டிரைவர் இருக்கும்போது நீ எதுக்கும்மா கார் ஓட்டணும்." -சோமநாதன் பவிசு காட்டி பேசுகிறார்.

"நாப்பது பேர் இருந்தாலும் நான் தான் ஓட்டுவேன்." -அவள் சொல்லிக்கொண்டே அவன் எதிரில் கை நீட்டுகிறாள் கார் சாவிக்காக...

அவன் சோம்நாத்தை ஒருமாதிரி பார்க்கிறான்.

அவர் புருவம் வளைய முகம் சற்று சாய்ந்து அசைந்து சம்மதம் தர சாவி கைமாறுகிறது. அவளும் கிளம்புகிறாள்.

சந்தோஷப் பெருமூச்சுடன் திரும்பவும் ஹிண்டுவுக்குள் நுழைகிறார். சற்றைக்கெல்லாம் தொலைபேசி அழைப்பு.

டேபிள் மேல் கிடக்கும் கார்ட்லெஸ் காதுக்கு வருகிறது.

"யெஸ் சோம்நாத் ஹியர்!"



"நான் பார்கவா பேசறேன் சோம்நாத்."

"சொல்லுங்க ஜீ."

"என்னத்த சொல்லுங்க... வெளியில போயிருந்தேன். வழியில் ப்ரியாவை பார்த்தேன். செல்ஃப் டிரைவிங்ல எங்கேயோ போய்கிட்டிருக்கா. தனியா அனுப்பக் கூடாதுன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்."

"..."

"என்ன சோம்நாத் பேச்சக் காணோம். என்னடா இவ்வளவு உரிமை எடுத்துப் பேசறேனேன்னு நினைக்காதே. உன் நல்லதுக்குத்தான் சொல்றேன். பார்கவன் சொன்னா அந்த பரந்தாமனே சொன்ன மாதிரின்னு எல்லாரும் சொல்றதையும் ஞாபகப்படுத்த விரும்பறேன்." -மறுமுனை அறுபட கார்ட்லெஸ்ஸை கீழே வைக்கிறார் சோம்நாத். முகத்தில் அளவான கலவர உணர்ச்சிகள்!

காரை ஆஞ்சனேயர் கோவில் முன் நிறுத்துகிறாள் ப்ரியா. பக்கத்து ஆசனத்தில் அதுவரை அமர்ந்து வந்த அர்ச்சனைக் குடலையை எடுத்துக் கொள்கிறாள்.

ஆர்க்கண்டி சேலையை உடுத்தியிருக்கிறாள். சந்தன வண்ணம் அவள் தேகம் போலவே... நடக்கும் போது சரசரக்கிறது- கூடவே இழைகிறது கொலுசு!

அந்த சங்கீதம் கோவிலுக்கு வந்தவர்களையும் சுண்டி இழுக்கிறது.

சன்னதி பட்டர் ஆஞ்சனேயர் முன் காலையில் உட்கார்ந்தால் மதியம் வரை எழுந்திருக்க மாட்டார். உட்கார்ந்தபடி தேங்காய் உடைத்து கற்பூர ஆரத்தி காட்டி தட்டை நீட்டி வந்தவர்களை வழியனுப்புவார்.

ப்ரியா வரவும் எழுந்து நிற்கிறார்.

அதற்கு முன்பாக ஒரு முக்கிய விஷயம்.

அவர் அப்படி உட்கார்ந்த ஜோரில் அர்ச்சனை செய்து கற்பூரத் தட்டை நீட்டியதற்காக சண்டை போட்டிருந்த

சரவணன் ஆஞ்சனேயரை நாற்பத்தெட்டு சுற்று சுற்றிக் கொண்டிருக்கிறான்.

"வாம்மா வா... அப்பா வரலையா?" -பட்டர் வழிகிறார்.

"இல்ல... நான் மட்டும்தான் வந்தேன்." -அவள் அர்ச்சனைக் குடலையை அவர் எதிரில் நீட்டுகிறாள். சுற்றியபடியே முறைக்கிறான் சரவணன்.

"பேர் நட்சத்திரம் கோத்ரமெல்லாம் சொல்லும்மா..."

"பேர் ப்ரியா... நட்சத்திரம் கேட்டை ஹரித கோத்ரம்" அவள் சொல்லவும் பட்டர் முகத்தில் மேலும் பிரகாசம்.

"கேட்டை நட்சத்திரமா நீ... அந்த நட்சத்திரத்துக்கு இப்ப யோக காலம். தொட்டதெல்லாம் தங்கமாகும்." -ஐஸ் வைத்தபடி ஆஞ்சனேயர் பக்கம் திரும்புகிறார்.

சரவணன் சுற்றி முடித்து ப்ரியா எதிரில் நிற்கிறான்.

பட்டரை சற்று சிவந்த முகத்துடன் நோக்குகிறான்.

அர்ச்சனை முடிந்து திரும்பபவரை முறைத்துக் கொண்டே இருக்கிறான்.

"என்னப்பா அம்பி... சுத்தி முடிச்சாச்சோல்லியோ? கிளம்பவேண்டியது தானே?"

"இல்ல ஒரு சந்தேகம்..."

"என்ன?"

"நானும் கேட்டை நட்சத்திரம்தான். அர்ச்சனையின் போது கேட்டேன். சொன்னேன். ஆஞ்சனேயரை விடாம பிடிச்சுக்கோ இல்லேன்னா ஆபத்துன்னீங்க. ஆனா இந்த பொண்ணுக்கு மட்டும் யோக காலம்கறீங்க?"

-மடக்குகிறான் சரவணன். திணறிப் போகிறார் பட்டர். இடையில் சிரிக்கிறாள் ப்ரியா. தட்டை வாங்கிக் கொண்டு சிறிது தூரம் செல்பவள் நின்று திரும்பி "மிஸ்டர், உங்களுக்கும் யோக காலம் தான் இனிமே..."



-என்கிறாள். சரவணன் அதைக் கேட்டு சிரிக்கிறான். "தேங்க்ஸ் மேடம்." என்கிறான்.

"ஆஞ்சனேயருக்கு சொல்லுங்க..." -அவள் திரும்பி விடுகிறாள். காரை நெருங்கி லாவகமாக கிளப்புகிறாள். அகலாத ஆச்சரியத்தோடு பார்த்தபடி நிற்கிறான். திரும்புகிறான். பட்டரிடம் திணறல் தீர்ந்தபாடில்லை.

"பட்டரே... ஆமா யார் இந்த பொண்ணு?"

"யாரா... நன்னா கேட்டேபோ. மில்லியனர் சோம்நாத் பொண்ணுப்பா. ப்ரியா ஃபாசனர்ஸ்னு கேள்விப் பட்டதில்ல நீ...?"

"ஆமா..."

"அதோட ஜாய்ண்ட் எம்.டி..."

"நிஜமாவா... அவங்களா இவ்ளோ சிம்பிளா கோவி லுக்கு வந்துட்டு போறாங்க..." -சரவணன் கொளுத்திய மத்தாப்பாட்டம் மாறுகிறான்.

"சந்தேகமா இருந்தா நேர்லையே போயி கேட்டுக்கோ அம்பி. ஆஞ்சனேயர் முன்னால உக்காந்துண்டு நான் பொய் சொல்வேனா என்ன?"

"ஐயோ முன்னாலையே தெரியாம போயிடுத்தே?"

"தெரிஞ்சிருந்தா?"

"இவங்க ஃபேக்டரில தான் நேத்து வேலைக்காக இண்டர்வியூவிற்கு போனேன். அந்த வேலை கிடைக்கணு மேன்னு தான் இங்க ஆஞ்சனேயரையும் சுத்திகிட்டிருக் கேன். முன்னாடியே தெரிஞ்சிருந்தா மேடத்துகிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருப்பேனே...?"

-சரவணன் வழிகிறான். பட்டர் லேசாய் சிரிக்கிறார். சிரிப்பு கலையாமல் சொல்கிறார்.

"கவலையேபடாத அம்பி... சக நட்சத்திரத்துல உள் ளவா எப்ப எங்க சந்திச்சண்டாலும் அங்க அவாளுக்கு நடுவுல ஒரு பரஸ்பரமும், அன்யோன்யமும் நிச்சயம் உருவாகும். உனக்கு இங்க உருவாயிடுத்து- இது நிச்ச

யம் தொடரும்" -பட்டரின் பதிலுக்கு ஆமோதிப்பாய் யாரோ கோவில் மணியை அசைத்து சம்மதம் தருகிறார்கள்.

சிலிர்த்துப் போகிறான் சரவணன்.

## 2

*'எல்லோரும் எல்லோரையும் நேசித்துவிட முடியாது. ஒருவன் யாரை நேசிக்கமுடியும் யாரை நேசிக்க முடியாது என்பதை அவரவர் பிறப்பே தீர்மானிக்கிறது. அதன் படி ஒன்றாம் தேதியில் பிறப்பவர்கள், ஒன்றாம் எண்ணை உடையவர்கள் நான்காம் எண்ணோடும், எட்டாம் எண்ணோடும் சுலபமாக நட்பு வசப்பட்டு இணங்குவார்கள். அதுமட்டுமல்ல... ஒன்று நான்கை ஆட்டி வைக்கும். நான்கும் ஒன்றுக்கு கட்டுப்பட்டு சேவகம் செய்யும். இது ஒரு ஆராய்ச்சி பூர்வ உண்மை.'*

*-எண்கணித ஆராய்ச்சியாளர் பி. கி. லால்.*

போர்டிகோவிலுள் நுழைந்து நிற்கிறது கார். துள்ளலுடன் இறங்கி உள் நுழைகிறாள் ப்ரியா. அவளைப் பார்த்தபிறகே சோமநாத்துக்கு சமாதானமாகிறது.

"அப்பாடா..." -பெருமூச்செறிகிறார்.

"என்னப்பா... எதுக்கிந்த பெருமூச்சு?"

"நீ நல்லபடியா திரும்பி வந்ததுக்குதான். 'வேற எதுக்கு?"

"இங்க இருக்கற கோவிலுக்கு போய்ட்டு வந்துருக்கேன். இமயமலையா ஏறி இறங்கியிருக்கேன். -இவ்வளவு கவலைப்படறீங்களே?"

"உனக்கு சொன்னா புரியாதுடா ப்ரி... எப்படியோ நல்லபடியா திரும்பி வந்தியே... பார்கவா போன் பண்ணி



காய்ச்சி எடுத்துட்டார்." -பேச்சில் பார்கவாவை சோம்நாத் தொடவும் ப்ரியா முகம் பளிச்சென்று மாறுகிறது.

"அவர் எதுக்கு உங்களை காய்ச்சணும்?"

"என்னம்மா கேள்வி இது... நம்மகுடும்பத்துக்கே அவர் தானேம்மா குரு."

"வெங்காயம்" -ப்ரியாவின் பதில் சோம்நாத்தை அதிரவைக்கிறது.

"ப்ரி... என்ன இது பார்கவாவை நீ யாருன்னு நினைச்சே?"

"தெரியும்... பெரிய ஜோதிட சாஸ்த்ர நிபுணர், கைரேகை நிபூமராலஜி, நேமாலஜி, வாஸ்து சாஸ்த்ரம்னு' சகலமும் கரைச்சுக் குடிச்சிருக்கற ஒரு மேதை. இந்த தேசத்து ஜனாதிபதிக்கே ஆலோசனை சொன்னவர். சரிதானே?"

"அப்படிப்பட்டவரையா அலட்சியப்படுத்தறே?"

"ஆமாம்ப்பா... இந்த மாதிரி ஜோசியம் ஜாதகம்னு யார் எதைச் சொன்னாலும் எனக்கு கோபம் கோபமா வருது. எல்லாம் பொய். பயங்கர சீல். நமக்கு மேல ஒரு சக்தி இருக்கு. அவ்ளோ தான். அதை நாம முருகன் விநாயகர் ஆஞ்சனேயர்னு விதவிதமான பேர்ல வழிபடுறோம். மத்தபடி எல்லாமே பொய். மனுஷன், தான் பிழைக்க சொல்ற பொய். பிறரை ஏமாத்த சொல்ற பொய்."

"பொய்யா... அதெல்லாம் சத்யமான உண்மைகள்மா."

"நோ... இதுக்கு மேல எதையும் பேசாதீங்க. அந்த பார்கவா வயசுல பெரியவர். அதுக்காக அவரை மதிக்கறேன். தட்ஸ்ஆல். மத்தபடி இந்த ஜோசியம் ஜாதகத்துக்காகவெல்லாம் கொஞ்சம் கூட கிடையாது."

-ப்ரியா சொல்லிவிட்டு மடமடவென்று மாடிப்படி ஏறுகிறாள். சோம்நாத் அதிர்ந்தாலும் சிரிக்கிறார். காரணம் இருக்கிறது.

"ப்ரியா இதை எல்லாம் இப்ப நம்ப மாட்டா... எதிர்த்து தான் பேசுவா. பின்னால நிச்சயமா நம்புவா. நீங்க அதைப்பத்தி கவலைப்படவேண்டாம். ஞான காரகன் கேது அவ ஜாதகத்துல சனியோடையும் செவ்வாயோடையும் கூட்டு சேர்ந்துருக்கான். அதுவும் சனிக்கு ஆகாத எட்டா மிடத்துல... எங்கேயும் தனியா மட்டும் அனுப்பாதீங்க. செவ்வாய் பலவீனமா இருக்கறதால விபத்துக்கு நிறைய வாய்ப்பிருக்கு' -என்று அவர் சொன்னது உள் ஓடுகிறது. பார்கவா நிஜமாலுமே பெரிய ஜோதிடர்தான். எத்தனை கச்சிதமாக ப்ரியா பற்றி சொல்லிவிட்டார்?

வியக்கிறார் சோம்நாத்!

'கௌசல்யா வந்திருந்தாள். கூடவே அத்தை அகிலாண்டமும்... வீடே ஒரே சத்தமாய் இருக்கிறது. அத்தைக்கு வெண்கலத் தொண்டை. பருத்த சரீரம்.

கோவிலிலிருந்து உள் நுழைகிறான் சரவணன்.

அத்தையை கௌசல்யாவை பார்த்து லேசாக அதிர்ச்சி காட்டுகிறான்.

"வா தம்பி... எங்க கோயிலுக்கு போய்ட்டுவரியா?" அத்தை கேட்கிறாள்.

"அ... ஆமாம் அத்தை. எப்படி இருக்கீங்க?"

"எனக்கென்னப்பா... உனக்கு கூட வேலை கிடைச்சிடுச்ச போல இருக்கே?" -அத்தையின் கேள்வி சரவணனை வியப்பில் தூக்கிப் போட, "ஆமாண்ணே உனக்கு வேலைல சேரச் சொல்லி ப்ரியா ஃபாசன்ஸ்ல இருந்து ஆர்டர் வந்துருக்கு. சூப்ரவைசர் வேலை..."

-தங்கை பாரதி இடையில் நுழைந்து ஆர்டரை நீட்டுகிறாள்.

சரவணன் திக்குமுக்காடிப் போகிறான்.

என்ன ஒரு ஆச்சரியம்? கொஞ்சம் முந்திதான் கோவில்பட்டர் சொன்னார்... அந்தபெண் ப்ரியா கூட உங்களுக்கும் இனி யோககாலம் என்றார்.



நிஜமாகி விட்டதே...!

கடிதத்தை படித்து விட்டு மகிழ்ச்சி பொங்க எல்லோரையும் பார்க்கிறான்.

குறிப்பாக மாமா மரகதலிங்கத்தை!

கல்யாணமே செய்து கொள்ளாத அந்த பிரம்மச்சாரி மனிதர் அவனை நெருங்கி வந்து தோளில் தட்டிக் கொடுக்கிறார். "நான் சொல்லலை... உனக்கு இனி நல்லகாலம்னு..."

-அவன் உடனடியாக அவர் காலில் விழுகிறான். அது அத்தையை என்னவோ செய்கிறது. இந்த சந்தோஷ சேதியை சொன்ன தன் காலில் அல்லவா முதலில் அவன் விழுந்திருக்க வேண்டும்?

கடுமையை உடனடியாக முகத்தில் தேக்குகிறாள் அகிலாண்டம்.

"அத்தை காலையும் விழுப்பா" -என்கிறார் மரகதலிங்கம். "இருக்கட்டும் இருக்கட்டும்... நாங்கள்ளாம் பெரியவங்களா என்ன... அதான் எல்லாருக்கும் சேர்த்து நீங்க இருக்கீங்களே..." -குத்தலாக பூசி மழுப்புகிறாள். சரவணன் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் அம்மாவின் காலில் விழுந்து எழுந்திருக்கிறான்.

"எனக்கு நீங்க இரண்டு பேர்தானேம்மா எல்லாம்..." -சற்று உருகுகிறான். புகைப்படத்தில் சிரிக்கும் அப்பாவை பார்த்து கண்கலங்கிப் போகிறாள் அம்மா காமாட்சி.

கௌசல்யா தன் மை விழியை இமைக்காது இவ்வளவையும் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அகிலாண்டத்தின் பொருமல் அவனது அலட்சியம் எல்லாவற்றையும் கவனிப்பவள் அம்மாவின் காதோரமாய் கிசுகிசுக்கிறாள்.

"அம்மா கவலைப்படாதே... கல்யாணம் நடந்து முடியட்டும். முதல்ல என் காலையும் அப்றமா உன் காலையுமா விழுந்து விழுந்து எழுந்திரிக்க வைக்கிறேன்."

-சமாதானமாகிறாள் அகிலாண்டம்.

"அப்புறம் என்ன... அண்ணி சொல்லிட்டா நிச்சய தார்த்தத்தை உடனே வெச்சிடலாம்." -அத்தை வந்த காரியத்துக்கு வருகிறாள்.

காமாட்சி மகனை பார்க்கிறாள். அவன் அலட்சியமாக அறைக்குள் நுழைந்து சட்டையை கழட்டுகிறான்.

"என்னண்ணா... பதில் சொல்லு." -தங்கை பாரதி இடையில் புகுந்து நிமிண்டுகிறாள்.

"என்னத்த சொல்ல... இப்பதான் வேலையே கிடைச் சிருக்கு. அதுல செட்டில் ஆகணும். ஜாப் கன்ஃபர்ம் ஆகணும்... உனக்கும் கல்யாணம் நடக்கணும். அதுக்கப் புறம்தான் என் கல்யாணத்தை பத்தி பேசலாம்."

"அவன் பதிலின் நியாயம் மரகதலிங்கத்துக்கு புரி கிறது. வெற்றிலைக்குதப்பலோடு சிரிக்கிறார். காமாட்சி யும். ஆனால் அகிலாண்டம் விடுவதாக இல்லை.

"அது பாட்டும் அது... அதுக்கும் கல்யாணத்துக்கும் என்ன சம்மந்தம்? சரவணனுக்கு கௌசல்யா... கௌசல் யாவுக்கு சரவணன்கறது தான் பொறந்தப்பவே செய்த முடிவாச்சே... என் அண்ணன் சாகும் போதுகூட சொல் லிட்டு தானே செத்துச்சு..."

"அத்தை..." -சரவணன் சற்று உச்ச ஸ்தாயியில் அழைக்கிறான்.

"என்ன சரவணா..."

"எனக்கு கௌசல்யா.... கௌசல்யாவுக்கு நான்கறதுல எந்த மாற்றமும் இல்லை. ஆனா கொஞ்சம் போகட்டும். கிணத்து தண்ணிய ஆத்து வெள்ளம் கொண்டு போயி டாது... ஞாபகம் இருக்கட்டும்."

-சொல்லிவிட்டு கௌசல்யாவை பார்க்கிறான். அவள் நெகிழ்ந்து விட்டிருக்கிறாள். அதன் எதிரொலி இமையின் ஈரத்தில் தெரிகிறது.



-அவன் புழக்கடைபக்கம் கால் கழுவ செல்கிறான். ஓசைப்படாமல் பின் தொடர்கிறாள்.

"அத்தான்..." -கால் கழுவுபவனை திருப்புகிறாள்.

"என்ன கௌசல்யா..."-அவன் கேள்வியோடு, வாய் கொப்பளிக்கிறான்.

"கொஞ்சம் இங்க வரீங்களா?" -அழைக்கிறாள். நெருங்குகிறான். அந்த கொல்லை தாழ்வாரப் பரப்பில் யாரும் இல்லை. அவள் சுற்றிச் சுற்றி பார்த்துவிட்டு மெலிந்த குரலில் கேட்கிறாள்.

"வழக்கமா தருவீங்களே... இல்லியா?"

அவனும் சுற்று முற்றும் பார்க்கிறான். பின் அவள் கைகளைப் பற்றி இழுக்கிறான்.

பின் பலமாக ஒரு அணைப்பு.

முன்பாகத்தில் நல்ல விளைச்சல். எனவே அவன் உணர்ச்சியில் அநியாயத்துக்கு சூடு ஏறுகிறது. அவள் உதடு வழியாக அதை அவளுக்கே திருப்பி அனுப்பு கிறான். அவள் மின்நிலையமாகவே மாறுகிறாள்.

"தேங்க்... யூ... அத்... தான்!" -என்கிறாள் விரகமான குரலில்.

-இடையில் யாரோ வரும் சப்தம்.

-சட்டென்று நீங்குகிறாள்.

மரகதலிங்கம் வந்து கொண்டிருக்கிறார்.

"மாமா..." அவரைப் பார்த்து வழியத் தொடங்கு கிறான் சரவணன். நெருங்கி வருபவர் அவனை ஊன்றிப் பார்க்கிறார்.

"என்ன மாமா அப்படிப் பார்க்கறீங்க?"

அவர் பதில் சொல்லாமல் பெருமூச்செறிகிறார்.

"மாமா... எதுக்கு இந்த பெருமூச்சு. எதுவா இருந்தா லும் சும்மா சொல்லுங்க."

"கௌசல்யாவை உனக்கு பிடிச்சிருக்கா?"

"நிறைய..."

"ஆனா நீங்க சேர முடியாது சரவணா..."

"சேரமுடியாதா?"

"ஆமா... உங்க ரெண்டு பேர் ஜாதகம் அப்படி."

"புடலங்கா... எனக்கு அதுலல்லாம் நம்பிக்கை இல்லைன்னு உங்களுக்கு தெரியும் தானே?"

"அதுக்காக அது மாறிடாது தம்பி."

"உளறாதீங்க மாமா..."

"வேண்டாம் சரவணா... அவ உனக்கு வேண்டாம். அவ கழுத்துல தாலி நிக்க வழியே இல்லை."

"போதும் நிறுத்துங்க. இனி ஒருதடவை இப்படி சொல்லாதீங்க. அத்தை காதுலயோ கௌசல்யா காதுலயோ விழுந்தா உங்களை உரிச்சிடுவாங்க..."

"எரிச்சாலும் சரி. நான் சொல்றதுதான் உண்மை. நீ இந்த குடும்பத்து தலைப்பிள்ளை. அம்மா தங்கைகளை காப்பாத்தற கடமை உனக்கு இருக்கு. ஒரு ஓரமா இந்த பிரம்மச்சாரியோட சுமைவேற.

நான் காசுக்கு மாரடிக்கற ஜோசியக்காரன் இல்லைன்னு உனக்கு நல்லா தெரியும். ஜோசியத்த ஒரு தவமா செய்து கத்துகிட்டவன். சொன்னா கேளு..."

"முடியாது மாமா... என்னால முடியாது. நீங்க என்ன சொன்னாலும் சரி..." -சரவணன் அங்கிருந்து நழுவுகிறான். கலங்கிப்போய் வெறிக்கிறார் மரகதலிங்கம்.

## 3

'ஜாதகப்படி பத்துப் பொருத்தம் பார்த்து செய்யப்படும் திருமணங்கள் தோற்பதேயில்லை. மீறித் தோற்பவை தவறான கணிப்பால் ஏற்பட்டதாக இருக்கும். காதல் திருமணங்கள் பெரும்பாலும் தோற்பதற்கு ஜாதகப் பொருத்தமின்மையே காரணம். ஜாதகப்பொருத்தமில்லாதவர்கள் எப்படி நேசிக்க முடியும் என்கிற கேள்விக்கு பாவக்கிரகங்களின் பார்வையை காரணம் சொல்கிறது ஜாதக சாஸ்திரம் அதிலும் சுக்கிரன் வக்கிர பார்வை பால்ய பிராயத்தில் பாடாய் படுத்தும்...'

-ஆராய்வாளர் பி.சி. ராய்



அதிதீவிர சிந்தனையோடு சோபாவில் அமர்ந்திருக்கிறார் வேலுப்பிள்ளை.

இப்படி ஒரு இடத்தில் நெடுநேரம் அமரக் கூடியவரோ, சிந்திக்கக்கூடியவரோ இவரில்லை.

இன்று என்ன வந்தது?

'அதிலும் ஆபீசில் இருந்து அக்கவுண்டண்ட் வந்து போனதில் இருந்து தான் அதிதீவிர சிந்தனையே...

அப்பாவை பார்த்தபடி டைகட்டிக் கொண்டு வரும் பிரகாஷ் அந்த சிந்தனையை பார்த்து ஆச்சரியப் படுகிறான்.

"என்னப்பா இது அதிசயம்... என்ன இது தீவிரமான சிந்தனை -அதுவும் கவலையோட?"

"கவலைப்படாம?"

"இப்படி மொட்டையா சொன்னா எப்படி... பிசினஸ்ல ஏதாவது பிராப்ளமா?" கேள்வியோடு -அவர் எதிரில் அமர்கிறான் அவன்.

"ஆமாம் பிரகாஷ்... பிராப்ளம்தான். எப்படி சமாளிக்கறதுன்னுதான் தெரியலை..."

"உங்களால சமாளிக்க முடியாத ஒரு பிரச்சினையா?"

"கிட்டத்தட்ட அப்படித்தான்... இந்த மாசம் ஆபீஸ்ல சம்பளம் போடக்கூட பணம் இல்லைன்னு சொல்லிட்டு போறார் அக்கவுண்டண்ட். பொதுவா எந்த ஒரு ஆட்டோ மொபைல் இண்டஸ்ட்ரியும் இப்ப நல்லா இல்லை. பத்து

கோடி ரூபாய்க்கு வியாபாரம் செஞ்ச கம்பெனியெல்லாம் ரெண்டு, மூணுன்னு இறங்கிடிச்சு."

"எதனால?"

"நிறைய காரணங்கள். ஸ்திரமில்லாத அரசாங்கம். தப்பு தப்பான பொருளாதார கொள்கை. எதை சொல்ல?"

"அப்ப எப்படி சமாளிக்க போறீங்க?"

"ஒருவழிதான் இருக்கு... உனக்கும் அது பிடிக்கும்னு நம்பறேன்."

"என்னப்பா?"

அவர் சொல்கிறார். அவன் மலர்கிறான்!

வேலுப்பிள்ளையும், பிரகாஷும் காரிலிருந்து இறங்கி உள் நுழைகின்றனர். சோம்நாத் உற்சாகமாக வரவேற்கிறார்.

"வாங்க வேலுப்பிள்ளை... வாங்க பிரகாஷ்... எப்படி இருக்கீங்க."

"இருக்கேன் அங்கிள்... நீங்க?"

"நல்லா இருக்கேன்பா... அப்புறம் -என்ன சாப்பிட்டீங்க?"

"நோ-ஃபார்மாலிடீஸ் சோம்நாத். ஆமா எங்க ப்ரியா?" கேட்கும் போதே ப்ரியா ஒரு புத்தகமும் கையுமாக எதிரில் வருகிறாள். சுடிதாரில், ஷாம்பூ குளியலெடுத்த தலைமுடியழகில், சின்ன பொட்டிட்ட நெற்றியழகில் சுண்டி இழுக்கிறாள்.

"குட்மார்னிங் அங்கிள்..."

"வாம்மா... வா உட்கார்."

"இருக்கட்டும் அங்கிள். என்ன சாப்பிட்டீங்க?"

"சாப்பிடுறேம்மா... அதுவும் தினமும் ..." -பொடி வைத்துப் பேசுகிறார் வேலுப்பிள்ளை.

"தினமுமா?"



"ஆமாம்மா... நீ என் வீட்டு மருமகளாயிட்டா தினமும் நீ தானே சாப்பாடு போடணும்."

-வேலுப்பிள்ளை இத்தனை நேராகவா விஷயத்துக்கு வருவார்? குப்பென்று வியர்க்கிறது ப்ரியாவிற்கு...

"அப்பா..." -இடைபுகுகிறான் பிரகாஷ்.

"என்ன பிரகாஷ்..."

"என்னப்பா இது... இப்படியா உங்க ஆசையை பகிரங்கமா போட்டு உடைப்பீங்க. கொஞ்சம் கூட இங்கிதமில்லப்பா உங்களுக்கு.

"இதுல இங்கிதத்துக்கு என்னப்பா இருக்கு?"

"பின்ன... கல்யாணம்கறது ஒரு பெண்தான் சுதந்திரமா தீர்மானிக்கவேண்டிய விஷயம். நிர்பந்தமில்லாமலும் அதை பிரியத்தோடையும் செய்யணும். அதுக்கு நாம இடம் கொடுக்கணும்பா..."

-பிரகாஷின் கருத்து ப்ரியாவைக் கவருகிறது. தன் சின்னக் கண்களால் சிமிட்டலுடன் அவனைப் பார்க்கிறாள். சோம்நாத்தும் பிரகாஷை சற்று ஸ்நேகப் பார்வை பார்த்து சிரிக்க வேலுப்பிள்ளை இதற்கும் பதில்தரத் தொடங்குகிறார்.

"பிரகாஷ்... சோம்நாத்துக்கும் எனக்கும் முப்பது வருஷ பழக்கம். சுத்தி வளைச்சு பேச வேண்டிய அவசியமெல்லாம் எனக்கில்லை தெரிஞ்சுக்கோ. என் ஆசையை நான் சொல்லிட்டேன். மாட்டேன்னா முடியாதுன்னு ப்ரியா சொல்லட்டுமே. இதில தப்பென்ன இருக்கு? என்னம்மா... என்ன சொல்றே நான் உன்னை தர்மசங்கடப் படுத்திட்டேனா என்ன?"

"அது... அது..." -ஆமோதிக்கிற மாதிரி அவரைப் பார்க்கிறாள் ப்ரியா.

"சும்மா சொல்லு..."

"அவ என்ன சொல்றது வேலு. நான் சொல்றேன். பிரகாஷ் ஜாதகம் அனுமதிச்சா எனக்கு ஆட்சேபணையே இல்லை..."

"ஜாதகமா... என்னப்பா சொல்றே?"

"ஆமாம் வேலு... நான் அதை ரொம்ப மதிக்கறேன். நம்புறேன். எனக்கு அதோட சம்மதம் ரொம்ப முக்கியம்."

-குண்டைத் தூக்கி போடுகிறார் சோம்நாத். ப்ரியா அப்பாவை உடனே முறைக்கிறாள்.

"அப்பா..."

"தெரியும். எனக்கு இதெல்லாம் பிடிக்கலைன்னு சொல்லுவே. பட் ஐ டோண்ட் கேர். நான் நம்புறேன். அதன்படி தான் செயல்படுவேன்."

"அப்ப ஜாதகம் பிரகாஷுக்கு சாதகமா இல்லைன்னா?"

"இல்லதான்... வேற இடம்தான்!"

"நோ... என் கல்யாணத்தை நான்தான் தீர்மானிக்கணும். வெனோ ஒரு ஜோசியக்காரன் இல்ல."

-அப்பாவும் மகளும் செய்யும் தர்க்கத்தைப் பார்த்து வேலுப்பிள்ளையும் பிரகாஷும் சற்று திணறினாலும் வேலுப்பிள்ளை சமாளிக்கிறார். "உன் இஷ்டப்படியே செய் சோம்நாத். எனக்கு ஜாதகத்துல நம்பிக்கை இருக்கு."

"அப்படிச் சொல் வேலு..." -சோம்நாத் திடத்துடன் நிமிருகிறார்.

ப்ரியா முகத்தில் ஊசிச்சரத்தின் வெடிப்பு. கிட்டதட்ட பிரகாஷும் அதே நிலையில்தான் இருக்கிறான்.

தனக்கென ஜாதகமே இல்லாத நிலையில் அப்பா எங்கு போவார்? என்ன செய்வார்?



## 4

**உலகம் முழுக்க இரும்பு தொடர்பான தொழிற்சாலைகளில் நான்காம் எண்காரர்களும், எட்டின் ஆதிக்கம் உடையவர்களுமே அதிகம் அகப்படுகின்றார்கள். மற்ற எண்காரர்களும் இருக்கலாம் -பணிபுரியலாம்.**

**ஆனால் இந்த எண்காரர்கள் பசைபோட்டு ஒட்டிக் கொண்டுவிடுவார்கள். இரும்புக்கும், இந்த எண்ணுக்கும் அப்படி ஒரு தொடர்பு.**

**-எண் கணித மாயங்கள்**

உற்சாகமாக ஃபேக்டரியினுள் நுழைகிறான் சரவணன். ஆனால் செக்யூரிட்டியிலேயே வரவேற்பு அத்தனை சரியாக இல்லை.

"என்ன இன்டர்வியூவா?"

"இல்ல... செலக்ஷன்."

"மாட்டியாச்சா?"

"அப்படின்னா?"

"இல்லை சேர்ந்தாச்சான்னு கேட்டேன்."

"சேரப்போறேன்னுதான் சொன்னேனே."

"ஹீம்... தலையெழுத்து யார் மாத்தமுடியும்... போ! போ!... ஆமா எந்த டிபார்ட்மெண்ட்?"

"மார்க்கெட்டிங்..."

"சரிதான்... மால் நிறைய கிடைக்கற இடம்தான். ஜமாயுங்க..."

-செக்யூரிட்டியின் விளக்கம் அவனுக்கு புரிகிறது. மனதை கீறுகிறது. மெல்லிய வேதனையுடன் நடக்கிறான்.

பர்சனல் டிபார்ட்மெண்ட்டில் ஆர்டரை வாங்கிக் கொண் டார்கள். மிடுக்காக கையை குலுக்கி விட்டு தேவை யில்லாமல் உட்காரச் சொன்னார்கள்.

அந்த இடைவெளியில் அங்கு ஒரு க்ளார்க் குமுதம் படிப்பதை பார்க்க முடிந்தது. அதன்பின் அங்கிருந்து கிளம்பி மார்க்கெட்டிங் செக்ஷனுக்கு போகும்போது உள்ளே ஒர்க்ஷாப் ஃப்ளோர் வழியாகத்தான் போகவேண்டி யிருந்தது. வேலை மும்முரமே யாரிடமும் தெரிய வில்லை. நான்கு நான்கு பேராக கூடி பேசிக் கொண் டிருந்தார்கள். எங்கு பார்த்தாலும் எண்ணெய் கசடு. அங் கங்கே டீ குடித்துவிட்டு வைத்த டம்ளர்கள்.

இத்தனை கவனிப்போடும் அவனது நடை மார்க் கெட்டிங் செக்ஷனில் போய் முடிகிறது. மேனேஜர் சங்கர லிங்கபூபதியிடம் அறிமுகப்படுத்தப்படுகிறான்.

"சார் பேர் சரவணன்... இங்க இனி உங்க ஜூனியர்."

"அப்படியா... குட்! வெல்கம் சரவணன்." -அவரும் கைகுலுக்கி வரவேற்று சீட்டை காட்டுகிறார்.

ஏ.சி. அறை!

இதமான பெர்ஃப்யூம் வாசம்.

பளிச்சென்ற நாற்காலி மேசைகள்.

நல்ல ஒரு சூழ்நிலைக்கு வந்துவிட்டதாக உள் மன தில் எண்ணம் பரவும்போது தொலைபேசியின் அதட்டல்.

எடுத்து காதைக் கொடுக்கிறார் சங்கரலிங்கபூபதி. பேச ஆரம்பித்த விதத்தில் அது மனைவியிடம் இருந்து வந்த கால் என்பது பேசுவதிலேயே புரிகிறது.

"இல்ல ரஞ்சனி சொன்னா கேளு... அந்த சங்கிலி வேண்டாம். உனக்கு அது நல்லா இருக்காது. விலையும் அதிகம். போனமாசம் தானே அறுபதாயிரத்துக்கு நெக்லஸ் வாங்கித் தந்தேன். இப்பவும் போட்டு உலுக்க நான் என்ன பணம் காய்ச்சிமரமா?"

". . ."



"புரிஞ்சுக்கம்மா... அந்த சீட்டுக்கும் ஆள்வந்தாச்சு. வராதவரை சரி... இனி பேசிப்பாக்கனும். இதோ பார் இனிமே ஆபீசுக்கு போன் பண்ணாதே. எதுவா இருந்தா லும் வீட்ல வெச்சுக்கலாம். என்ன?" டொடக்.

பூபதி ரிசீவரை வைத்து விட்டு திரும்புகிறார்.

நின்றுகொண்டே இருக்கிறான் சரவணன்.

"உட்காருப்பா..."

"இருக்கட்டும் சார்..."

"ஆமா... இதுக்குமுந்தி எங்கையாவது வேலை பார்த்திருக்கியா?"

"இதுக்குமுந்தி... முந்தி... இல்ல சார்."

"அதுக்கு ஏன் இத்தனை தயக்கம். ஆமா ஃபேமிலில எத்தனை பேர்?"

"என்னோட சேர்த்து நாலுபேர் சார். சொந்த வீடு. அப்பா இல்ல. ஓரளவு வாடகைவருது. அதனால சமாளிக் கறோம்."

"தங்கை அக்கான்னு..."

"ஒரு தங்கை சார். அப்றம் அம்மா... மாமா!"

"ஐ.சீ... தங்கைக்கு கல்யாணம்?"

"இனிமே தான் சார்..."

"என்ன வயசு?"

"23"

"மைகாட்... இப்பல்லாம் சீக்கிரம் பண்ணிடனும்பா. காலம் கெட்டுக் கிடக்குல்ல..."

"ஆமாம் சார்... பணம் வேண்டாமா?"

"ஏன் சேமிப்பு எதுமில்லியா...?"

"எங்க சார்... அப்பா தங்கச்சி பொறந்தப்பவே இறந்துட்டார். அப்புறம் மாமாதான் கேர்டேக்கர்.

அவருக்கும் பெரிசா உத்யோகம் கிடையாது. ஜோசியம் பார்ப்பார் ஓரளவு -அந்த வருமானம்தான்.

"பலேபலே... வாட்ஸ் யுவர் நம்பர்..."

"நம்பர்னா?"

"பர்த்டே நம்பர்ப்பா..."

"தர்ட்டீன்... பதிமூனு சார்."

"நாலா நம்பர்காரனா நீ... குட் உனக்கு இந்த கம்பெனி ஏத்த இடம்தான்."

"எப்படி சார்?"

"இந்த நாலு, எட்டெல்லாம் இரும்புத் தொழிற்சாலை பக்கம் தான் அதிகம் போய் விழும்னு எதுலையோ படிச்சேன். அப்படியே நிறைய சம்பாதிக்கவும் செய்வாங்களாம்."

"அப்படியா சார்... ரொம்ப சந்தோஷம். சம்பாதிக்கனும் சார். சம்பாதிச்சா தானே சார் நல்லது."

"யார் இல்லேன்னா... ஆனா சம்பளத்த மட்டும் வாங்கி கரை சேர முடியாது தம்பி. உனக்கு என்ன சம்பளம் வரும்னு நினைக்கறே?"

"எவ்வளவு சார்..."

"இப்பத்தானே சேர்ந்திருக்கே... கன்சாலிடேடா ஒரு மூவாயிரத்தைநூறு தருவாங்க. ஒரு வருஷம் கழிச்சு தான் கன்ஃபர்மேஷன். அப்புறமா ஒரு ஏழுருவா வரும். ஏழுருவால்லாம் இன்னிக்கு எந்த மூலைக்கு?"

"வாஸ்தவம்தான் சார்..."

"சொன்னா போதுமா... கூட சம்பாதிக்க பாக்கனும்."

"ஓவர்டைமா சார்..."

"புடலங்கா. அதுல என்ன வந்துடும் பெரிஸ்ஸா... இது வேற மாதிரி வழி..."

"ஐய்யோ தப்பு தண்டா பண்ணியா சார்"

"தப்பும் கிடையாது -தண்டாவும் கிடையாது. நம்ம கஸ்டமர்கிட்ட அன்பளிப்ப வாங்கினா போதும்."



"அன்பளிப்பு?"

"எல்லாத்தையும் முதல்நாளே தெரிஞ்சுக்க பாக்கறியே. பொறுமையா இரு. நான் ஒரு கிரவுண்ட் வாங்கினா உனக்கு ஒரு சைக்கிளாவது வரும்படி பண்றேன். ஒரு விஷயம் மட்டும் ஞாபகத்துல வை..."

"என்ன சார்...?"

"வெளில மூச்சுவிடக் கூடாது. சொல்றத செய்யனும். கிணத்துல விழச் சொன்னா கூட விழனும்."

-அவர் அந்த பத்துபதினைந்து நிமிட பேச்சிலேயே தான் எப்பேர்ப்பட்ட மனிதன் என்பதை காட்டி விட்டது போல சிரிக்கிறான்.

சரவணனால் மட்டும் முடியவில்லை!

## 5

'**வா**ன் கணிதம் என்பது ஒரு உன்னதமான கலை. விஞ்ஞானத்துக்கு துளியும் சளைக்காத மெய்ப்பாடுகளை உடையது அது. பூமிப்பந்தின் மீது படும் ஒன்பது கிரகங்களின் கதிர் வீச்சை கணித்து அதற்கேற்ப பலன்களை சொல்லக் கூடியது வான் கணிதம் மட்டுமே. இதை அறிந்தவன் தன்னை மட்டுமின்றி ஒவ்வொரு மனிதனையும் அறிய முடிந்தவனாவான்.

ஜாதக பலன்கள் மாறியோ அல்லது நடக்காமலோ போவதற்கு காரணம் கணக்கு செய்த முறையின் பிழையாக இருக்கலாம். சரியாக போடத் தெரிந்தால் வான்கணிதம் மூலம் ஒருவர் உயிர் எந்த நேரம் எப்படிப் பிரியும் என்பது வரை துல்லியமாகக் கூறி விடலாம்.'

-ஜாதகம் ஒரு பார்வை...
ஒரு கட்டுரையிலிருந்து

பிரகாஷின் ஜாதகத்தை கம்ப்யூட்டர் பதிவெடுத்து பிரிண்ட்டரில் வெளித்தள்ளுகிறது. கிழித்து எடுத்து அதை நாற்காலியில் சாய்ந்தபடியே படிக்கிறார் வேலுப் பிள்ளை. அருகிலேயே பிரகாஷ்.

"இந்த போலி ஜாதகம் பொருந்துமாப்பா?" -பேப்பர் வெயிட்டை உருட்டியபடியே கேட்கிறான்.

"இதுதான் பிரகாஷ் பொருந்தும். உள்ளபடியே உன் ஒரிஜினல் ஜாதகம் தான் பொருந்தாது."

"கணிச்சீங்களோ?"

"ஆமாம்... தேர்ந்த ஒரு ஜோதிடரைப் பார்த்து உன் ஒரிஜினலை கணிச்சேன். அதை ப்ரியா ஜாதகத்தோட பொருத்திப் பார்த்தேன். சுத்தமா பொருந்தலை. அப்புற மாதான் அவ ஜாதகத்துக்கு பொருந்துற மாதிரி ஒரு போலியை பிரிபேர் பண்ணினேன்."

"அப்ப இனிமே பிரச்சினை வராது தானே?"

"வரக்கூடாது... ப்ரியா தான் அடுத்து சோம்நாத்தோட ஃபேக்டரி வாரிசு. அவளே உன் மனைவியாயிட்டா அப் புறம் அது உன் சொத்து தானே?"

"நாளைக்கு வரப்போறத விடுங்க. இப்போதைய கடனுக்கு என்ன பண்ணப் போறீங்க?"

"முதல்ல தாலிய கட்டு... அப்புறமா சொல்றேன். அவளை ஒவ்வொரு முறை நாம துரத்தி விடும்போதும் அவ ஒவ்வொரு சூட்கேஸோட வந்தாதான் வாழ்க்கைங் கற மாதிரி எதாவது செய்வோம்."

-வேலுப்பிள்ளை தனது சூது மிகுந்த திட்டத்தை லேசாக கோடிட்டு காட்டுகிறார்.

சிரிக்கிறான் பிரகாஷ்.

"ஏண்டா சிரிக்கிறே?"

"இல்லே... எப்படி எல்லாம் கீழ் இறங்கிப் போய் நடந்துக்க வேண்டியிருக்கு பாருங்க..."



"அப்படியா... அப்ப விட்டுரு. நாளைக்கே மஞ்சக் கடுதாசி கொடுத்துடுவோம். உன்படிப்புக்கு ஒரு க்ளார்க் வேலை கிடைக்கும். எனக்கும் கணக்கெழுதவரும். எப்படி வசதி?"

-வேலுப்பிள்ளை சென்டர் பார்த்து பிடிக்கிறார்.

"நோ... விளையாடாதீங்க. பிச்சைக்காரன் கோடீஸ் வரனாகறதைவிட கொடுமையானது கோடீஸ்வரன் பிச்சைக்காரனாகறது.

"தெரியுதுல்ல... அப்ப சொன்ன பேச்சக் கேளு..." -வேலுப்பிள்ளையின் கட்டளைக்கு உறுதியான சம்மதம் போல "சரிப்பா" என்றவன் "அப்பா..." என்கிறான் அடுத்த நொடி...

"என்ன?"

"அந்த ஒரிஜினல் ஜாதகத்துல என்னப்பா சொல்லி யிருக்கு."

"உனக்கு இந்த ஜென்மத்துல கல்யாணம் இல்லை யாம். ஜெயிலுக்கு போற யோகமெல்லாம் இருக்காம். நம்பறியா?" -அடுத்த நொடி அவன் முகம் கறுக்கிறது.

"நோ... முடியாது... மாட்டேன். டாட்... அந்த ஜாதகத்தை பொய்யாக்கியே தீரணும்."

"அப்படிச் சொல்லு... பொய்யாக்கத்தானே போறோம்." -அவர் கொஞ்சம் சிகரெட் புகை கலந்து சொல்ல அவன் வியர்த்துவிட்ட முகத்தை துடைத்துக் கொள்கிறான்.

எளிய வீடுதான் பார்க்கவாவுடையது!

அதன்முன் கார் தேங்க சோம்நாத் இறங்கி உள் நுழைகிறார். கையில் பிரகாஷின் பித்தலாட்ட ஜாதகம். "வா சோம்நாத்... போன் பண்ணியிருந்தா நான் வந்து ருப்பேனே. என்ன விஷயம்?"

"முக்கிய விஷயம் ஜீ. நீங்க சொன்ன மாதிரியே ப்ரியா வுக்கு கல்யாண நேரம் வந்துடிச்சி. உரியவன் தேடி வரு

வான்னு சொன்னீங்க, அதேபோல வந்துட்டான். இது பையனின் ஜாதகம். பொருந்துதான்னு பாருங்களேன்."

"சபாஷ்... கொண்டா பார்ப்போம்; ஆமாம்... அந்த விஷயத்தை நீ மறக்கலியே..."

"எந்த விஷயத்தை..."

"என்ன சோம்நாத்... இவ்வளவு சீக்கிரம் மறந்துட்டே? உனக்கு மாப்ளையா வரப்போறவன் உன் வீட்டோடதான் மாப்ளையா இருக்கணும். ப்ரியாவை கூட்டிகிட்டு அவன் போகக் கூடாதுன்னு சொன்னேனே..."

"அட ஆமாம்... மறந்தே போனேன். அது எப்படி பார்கவா ஜீ கல்யாணம் பண்ணிக் கொடுத்தா ஒரு பொண்ணு புகுந்த வீட்டுக்கு போறது தானே முறை..."

"யார் இல்லேன்னா... அப்புறம் உன் வீடு வறண்டு நீ தெருவுக்கு வந்துடுவே. பரவால்லியா?"

"என்ன ஜீ... பயமுறுத்தறீங்க?"

"பயமுறுத்தல, உள்ளதை சொல்றேன். இப்ப நீ இருக்கறதே உன் மக ராசிச்சக்கர வலுவாலதான். அவ மகாலட்சுமி அம்சம். அவ எங்க போறாளோ அங்க போய்டும் எல்லா செல்வமும். போகவிடாம பார்த்துக்கோ சோம்நாத்."

-பிரகாஷின் ஜாதகத்தை கையில் வாங்கிக்கொண்டு பார்கவா ஜீ பேசுவதைக் கேட்டு கலங்கிப் போகிறது சோமநாத் மனது. இருந்தாலும் சுதாரித்துக் கொள்கிறது.

"பிரகாஷ் சொன்னால் கேட்காமலா போய்விடுவான்?"

"என்ன யோசனை சோம்நாத்...?" -நிமிண்டுகிறார் பார்கவா. "ஒண்ணுமில்ல ஜீ... நீங்க பொருத்தம் பாருங்க. மற்றத நான் பாத்துக்கறேன்."

ஏதோ ஒரு தீர்மானமுடன் வாக்குறுதி தருகிறார்.

அடுத்த நொடி பார்கவா பார்வை அந்த ஜாதகத்தை மேய ஆரம்பிக்கிறது.



சரியாக, அரைமணிக்கு பிறகு "அற்புதமா இருக்கு... தாராளமா கல்யாணம் பண்ணலாம்." -என்று ஜாதகத்தை திருப்பி தருகிறார். சோம்நாத் முகத்தில் மகிழ்ச்சி வெள்ளம்!

## 6

'எண்கள் கூட்டத்தில் நான்கு சற்று விசித்ர மானது. எதோடும் ஒட்டாமல் தனியே தெரியும். எந்த இடத்திலும் இவர்கள் வழி -தனி வழி! அதே சமயம் வாழ்வின் நுட்பமான விஷயங்கள் இவர்களுக்கு சுலபமாக பிடிபடும். பெரும்பாலும் ஏழாம் எண்ணோடு ஒத்துப்போக முடியாதபடி போகும்...

-எண்கணித சாஸ்திரத்திலிருந்து

வீட்டுக்குள் நுழையும் போதே சரவணனிடம் சுரத்தில்லை. மாமா மரகதலிங்கம் பார்த்துக் கொண்டுதானிருக்கிறார். அம்மாவும் தங்கையும் ஆசையாக ஓடி வருகிறார்கள்.

அவனது முதல் நாள் வேலையனுபவத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள அத்தனை ஆசை! நிச்சயம் பூ, பழம் ஸ்வீட்னு வருவான் என்று பாரதியின் கணக்கு.

-எல்லாம் பொய்யாகி விட்டது.

"என்ன சரவணா ஒரு மாதிரி இருக்கே... வேலை சேர்ந்துட்ட தானே?"

-அம்மா காமாட்சி பேச்சை துவக்குகிறாள்.

"சேர்ந்துட்டேம்மா..."

"ஏன் டல்லா இருக்கே... வேலை ஜாஸ்தியா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லம்மா..."

"என்னண்ணே புதிர் போடறே... நீ ஸ்வீட் வாங்கிட்டு வருவேன்னு எவ்வளவு ஆசையா இருந்தேன் தெரியுமா?"

-பாரதியை ஒரு தினுசாகப் பார்க்கிறான்.

"ஸாரி பாரதி... இந்த வேலை எனக்கு ஒத்துவருமான்னு சந்தேகமா இருக்கு..."

"என்னண்ணே சொல்றே... ப்ரியா ஃபாசனர்ஸ் எவ்வளவு பெரிய கம்பெனி?"

"ஆமாம்மா... அது பெரிய கம்பெனிதான் -ஆனா அங்க இருக்கறவங்க சின்ன புத்தி உள்ளவங்களா இருக்காங்க..." -இடையிடுகிறது லேசான இருமல் சப்தம், மாமா மரகதலிங்கம் தான்.

"அதனால என்ன பண்ணப்போறே?"

"தெரியல மாமா... ஃபேக்டரி ஃபேக்டரியாவே இல்ல. எங்கப்பார் பேச்சு. யார்கிட்ட பார் ஊழல்."

"ஒரு நாள்ல உனக்கு இவ்வளவு விஷயம் தெரிஞ்சுடுச்சா?"

"ஆமாம் மாமா... ஒரு நாள்லையே இவ்வளவு தெரிஞ்சிருக்கன்னா போகப் போக எவ்வளவு இருக்கும் -யோசிச்சுப் பாருங்க."

"அதனால என்ன சரவணா. யாரோ எக்கேடோ கெட்டுப் போகட்டும். நீ உன் வேலையை பார்க்க வேண்டியது தானே?"

"ஸாரிம்மா... அப்படில்லாம் இருக்க என்னால முடியாது. இந்தியா பூரா இந்த சுயநலம் அதிகமாயிட்டதாலதான் எங்கேயும் எதுவும் சரியில்லை. ஒரு தார் ரோடு ஒழுங்கா போடமாட்டேங்கறாங்க. ரேஷன்ல எடை திருட்டு எல்லாம் இதனால...

நம்மை கேக்க யாருக்கு தைரியம் இருக்குன்னு தப்பு செய்யறவங்க நினைக்கறதால தானே?"



"அது சரி... நீ என்ன பெரிய கமலா இல்ல ரஜினியா? பத்துபேரை அடிச்சி போட்டு பெரிய ஹீரோவா வந்து எல்லாத்தையும் சரிசெய்ய...

அதுகூட சினிமால மட்டும்தான் நடக்கும். நிஜவாழ்க்கைல அவங்கள பாத்துக்க அவங்களுக்கே போலீஸ் பாதுகாப்பு போட்ருக்காங்களாம். பிராக்டிகலா யோசிண்ணே?"

"எது பிராக்டிகல்... யார் எப்படிப் போனா என்னன்னு நாம வாயையும் கண்ணையும் மூடிக்கிட்டு இருக்கறதா?"

"டேய்... என்னடா இது தர்க்கம் பண்றே? நீ வேலைக்கு போய்ட்டே, பிரச்சினை தீர்ந்ததுன்னு நினைச்சுகிட்டிருந்தேன். கவலைப்படுத்தறியேடா தம்பி. எல்லாத்தையும் கடவுள் பாத்துக்குவார் சரவணா. நீ உன் டூட்டியைப் பார்..."

-அம்மா கிட்டத்தட்ட அழ ஆரம்பித்துவிட்டாள். மாமா அவன் தோளில் கை போடுகிறார். வாஞ்சை தெரிகிறது.

"நீ நீயா இரு சரவணா... யாருக்காகவும் எதையும் மாத்திக்காதே. மத்தவங்களுக்காக தன்னை மாத்திக்கறவன் சராசரி மனுஷன். தனக்காக மத்தவங்களை மாத்தறவன் தலைவன். நீ தலைவன்டா..."

-மாமா இப்படி அவனை ஊக்கப்படுத்துவார் என்று காமாட்சியோ, பாரதியோ துளிகூட எதிர்பார்க்கவில்லை.

சரவணன் சற்று நிம்மதிப் பெருமூச்சு விடுகிறான்.

வேலுப்பிள்ளையின் பங்களா முன் நிற்கிறது சோம்நாத்தின் கார். கூடவே பூ, பழம், மாலை என்று சீர்வரிசையாட்டம் தட்டுகள்.

"வா சோம்நாத்... என்ன இது பூ, பழம், மாலை எல்லாம்..."

"ஜாதகம் பொருந்திப்போச்சு வேலு... இனி என்ன... பிரகாஷ் என் மருமகன் தானே ... நீங்களும் என் சம்மந்தி.

சம்மந்திய... அதுலையும் பிள்ளை வீட்டுக்காரங்கள பார்க்க சாதாரணமாவா வருவாங்க..."

"சரி சரி உக்காரு... எது எப்படியோ ஜாதகம் பொருந்தினதுல ரொம்ப சந்தோஷம். எப்ப நிச்சயம் வெச்சுக்கலாம்."

"உங்க இஷ்டம்."

"அப்ப அடுத்த வாரத்துலயே ஒரு சண்டேல வெச்சுடுவோம்."

"ரொம்ப சரி... நானும் சொல்ல ஆசைப்பட்டேன். கல்யாணம் கணக்கா இருக்கும் நிச்சயதார்த்தமே..."

"அனாவசிய செலவு பண்ணாதே சோம்நாத். அதுக்கு நூறு அனாதை குழந்தைகளுக்கு சாப்பாடு போட்டா, நம்ம பசங்களுக்கு தான் புண்ணியம்."

"அதுவும் பண்ணத்தான் போறேன் வேலு. ஒரே பொண்ணு. நல்லா பண்ணலைன்னா எப்படி? உங்களுக்கும் ஒரே பிள்ளை. ஊரே எதிர்பாக்கற கல்யாணமாச்சே..."

சோம்நாத் இறக்கையில்லாமல் பறக்கிறார். வேலுப்பிள்ளை அதைப்பார்த்து ரசித்து சிரிக்கிறார்.

"ஆமா பொண்ணுக்கு என்ன பண்ணணும். எதுன்னு ஒண்ணுமே சொல்லலையே..." -சோம்நாத் முக்கிய விஷயத்தை தொடுகிறார்.

"என்ன சோம்நாத்... இந்த பண்றது வைக்கறதுல்லாம் மிடில் க்ளாஸ்ல. நமக்கெதுக்கு அந்த பேச்செல்லாம்...? நாளைக்கு என் மகன்தான் உன் சொத்துக்கெல்லாம் வாரிசு. அதேபோல உன் மகள்தான் என் சொத்துக்கெல்லாம் வாரிசு."

"ரொம்ப சந்தோஷம் வேலு... ஒரு முக்கியமான விஷயம்."

"என்ன சோம்நாத்?"

"கல்யாணத்துக்கு பிறகு தம்பி பிரகாஷ் கொஞ்சம் என்கூட இருந்தா நல்லா இருக்கும்..."



"புரியல... என்ன சொல்றே நீ?"

"இல்ல வேலு... என் ஃபாசனர்லை கொஞ்சம் ப்ரியோவோட சேர்ந்து பிரகாஷ் பாத்துக்கணும். உங்க பிசினஸ்க்கு நீங்க பிரகாஷை எதிர்பார்க்கக்கூடாது..."

-வேலுப்பிள்ளைக்கு ஏற்கனவே சற்று சிறிய கண்கள். அதை இடுக்கிக் கொண்டு சற்று பொய்க் கோபத்தோடு சோம்நாத்தை பார்ப்பவர் உதட்டில் மெலிதாக புன்னகையும் பரவுகிறது...

"வீட்டோட மாப்ளையா அவன் இருக்கணும்னு சொல்ல வர்ற. அப்படித்தானே?"

". . . ."

"தெரியுது சோம்நாத். நாமெல்லாம் வியாபாரிங்க. எந்த பேச்சுக்கு என்ன அர்த்தம்னு தெரியலன்னா எப்படி பொழப்பு நடக்கும்? சொல்லு பார்ப்போம்..."

"வீட்டோட மாப்ளன்னு அர்த்தமில்ல வேலு... வேணும்னா நீங்ககூட என் கூடவே வந்துடுங்க. எல்லாம் ஒண்ணா இருப்போம். தொழிலையும் நல்லா கலந்து பாத்துக்குவோம்..."

-சோம்நாத் தயங்கித் தயங்கி சொல்வதைக் கேட்டு வேலு சிரிக்க ஆரம்பிக்கிறார்.

அவ்வளவு நேரம் அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தவனைப்போல சற்று இறுகிய முகத்துடன் அங்கு பிரவேசிக்கிறான் பிரகாஷ்.

"வா பிரகாஷ்... உன் வருங்கால மாமனார் சொல்றதக் கேட்டியா?" -வேலுப்பிள்ளை மகனை வளைக்கிறார்.

"கேட்டேம்பா... கேட்டுகிட்டுதான் இருக்கேன். ஸாரி அங்கிள், இந்த வீட்டோட மாப்ளையா இருக்கறதெல்லாம் எனக்கு பிடிக்காத விஷயங்கள். தயவு செய்து மன்னிச்சிடுங்க. ப்ரியாவுக்கு வேற நல்ல வரனா பாருங்க..."

-அவன் பதில் சோம்நாத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கு கிறது.

"பிரகாஷ்... என்ன இது?" -வேலுப்பிள்ளை உரக்கக் கத்துகிறார்.

"ஸாரிப்பா... நான் இதுக்கு சம்மதிச்சா நான் இவர் சொத்துக்கு ஆசைப்பட்டுத்தான் கல்யாணம் பண்ணிகிட் டேன்னு நாளைக்கு சிலர் சொல்லலாம். வீட்டோட மாப்பிள்ளைன்னாலே அதுதானேப்பா அர்த்தம்...?"

-பிரகாஷின் கேள்விகள் சோம்நாத்தை கொத்துகின்றன.

"என் சோம்நாத்... எதுக்கு இப்படி ஒரு விபரீத ஆசை. ஒண்ணுபண்ணேன்... பொண்ணை பிரிய முடியலைன்னு கல்யாணத்துக்கப்பறம் நீ இங்க வந்துடேன். எதுக்கு உன் வீட்டோட மாப்ளையா தங்கச் சொல்றே... சொஸைட்டில மதிக்க மாட்டாங்கப்பா." -வேலுப்பிள்ளை நடுநடுவே தன் பங்கை புதைக்கிறார்.

சோம்நாத் எதும் பேசாமல் எழுந்து கொள்கிறார்.

கிளம்பம் ஆயத்தம் தெரிகிறது.

"என்ன பண்றது வேலு... நீங்க சொல்ற எதையும் நான் கேட்க முடியாத நிலைல இல்ல இருக்கேன்..."

"அப்படின்னா...?"

"வீட்டோட மாப்ளையா வர யார் சம்மதிக்கறாங்களோ அவங்களோட தான் சம்மந்தம். இதுல எந்த மாற்றமு மில்லை."

"அது அவ்வளவு சுலபமில்லை சோம்நாத். உன் கோரிக்கைக்கு ஒத்துக்கறவன் நல்ல பையனா இருக்க முடியாது."

"உண்மைதான்... அதே சமயம் ப்ரியாவை அனுப் பிட்டு என்னாலையும் தனியா வாழ முடியாது வேலு..."

"அப்ப அவ கல்யாணம்...?"

"கடவுள் விட்ட வழி..."



"உன் ஆசைக்கு கடவுள் என்ன பண்ணுவார். அவரை ஏன் வம்புக்கு இழுக்கறே?"

"என்னை என்ன பண்ணச் சொல்ற வேலு..."

"பெண்ணைப் பெத்தவன் இப்படி பிடிவாதமாகவும் நடைமுறைக்கு ஒத்துவராத கருத்தோடயும் இருக்கக் கூடாது..."

"..."

"இப்படி மௌனமா நின்னா எப்படி? ஒண்ணு பண்ணுவோமா?"

"என்ன வேலு?"

"உன் ஆசைக்கு நான் சம்மதிக்கேறன். என் மகன் உன் வீட்டோட மாப்பிளையா இருப்பான். ஆனா அதுக்கு காரணம் நான் விரும்பற மாதிரி இருக்கணும்."

"எப்படி?"

"உன் "பாசனர்ஸ"க்கு என் மகனை எம். டி. ஆக்கிடு. நிர்வாகப் பொறுப்பிருக்கு -அதனால என் மகன் உன் வீட்ல தங்கிட்டான்னு நான் சொல்லி தப்பிச்சுக்கறேன்."

"எம். டி -ன்னு ஆக்கினா தானா வேலு... எனக்கு பிறகு பிரகாஷும் ப்ரியாவும்தானே என் கம்பெனிக்கு அதிபதி?"

"அதை நான் மறுக்கல... அதேசமயம் அதை பேப்பர்ல செய்துட்டா உலகம் ஒருவிதமா பேசாது பாரு..."

-வேலுப்பிள்ளை அழகாக தனக்குத் தகுந்த மாதிரி காய் நகர்த்தி அதில் சோம்நாத் விழும்படி செய்ய சோம் நாத்தும் சரி என்பதுபோல தலையசைக்கிறார்.

இருந்தும் பிரகாஷ் தனது முடிவிலிருந்து மாறாத படி ஒரு லுக் கொடுக்கிறான்.

அதட்டுகிறார் வேலுப்பிள்ளை.

"பாவம் சோம்நாத்" -பொண்ணு பாசம். அதான் தவிக் கிறார். கொஞ்சம் அட்ஜஸ் பண்ணிக்கோ பிரகாஷ்."

"சரிப்பா... உங்க இஷ்டம்!" -பிரகாஷ் இணங்குகிறான். அற்புதமான நடிப்பு.

அடுத்த நொடி தட்டை எடுத்துக் கொள்கிறார் வேலுப் பிள்ளை.

"அப்ப நிச்சயதார்த்தம் சண்டே அன்னிக்குத்தானே சோம்நாத்?" -எடுத்துக்கொண்டு கேட்கிறார்.

"நிச்சயதார்த்தம்... அது நிச்சயமா சண்டே அன்னிக்குத்தான்."

"நிச்சயமே படு தடபுடலா இருக்கணும். நம்ப அசோசியேஷன் பத்தி அப்பதான் உலகுக்கு பளிச்சுன்னு தெரிய வரும்."

"அப்ப நான் உத்தரவு வாங்கிக்கறேன்." எழுந்திருக்கிறார் சோம்நாத்.

"இரு சோம்நாத் சாப்பிட்டு போகலாம்..." வேலுப் பிள்ளை இழுத்து நிறுத்துகிறார்.

## 7

*'சந்திராதி பத்யமுடையவர்கள் குருவின் பார்வையற்றுப் போனார்கள், அந்திமத்தில் ஜனித்தவர்கள் எண் 29-ஐ பிறந்த தேதியாக பெற்றிருப்பின் குறுக்கு வழியில் சம்பாதிப்பதில் மிக மோகத்துடன் இருப்பார்கள். சட்டத்தை மீறுவதற்கு அஞ்ச மாட்டார்கள்.'*

சைரன் சப்தத்தினை தொடர்ந்து ஃபேக்டரி எந்திரங்கள் ஓடத் தொடங்க ஒரு நித்ய பரபரப்பு அங்கு தொற்றிக்கொள்கிறது.

அறைக் கதவை திறந்து கொண்டு உள் நுழைகிறான் சரவணன். இன்னமும் சங்கரலிங்க பூபதி வந்திருக்கவில்லை. போய் சீட்டில் அமர்ந்து கொண்டு ட்ராயரை திறக்கிறான்.



தூக்கியடிக்கிறது.

உள்ளே கட்டுக்கட்டாய் ரூபாய் நோட்டுகள்!

ஐய்யோ முதல் நாளில் இல்லையே... இப்பொழுது மட்டும் எப்படி வந்தது?

திடுக்கிட்டு திணறும் போது உள்ளே நுழைகிறார். சங்கரலிங்க பூபதி. பதறியபடி இருக்கும் சரவணனைப் பார்த்து "குட்மார்னிங்" -என்கிறார்.

"குட்மார்னிங்... சார் ட்ராயர்ல... ட்ராயர்ல..."

"என்ன ரூபாயா?" -சச்சிதமாக கேட்கிறார்.

"உங்களுக்கு தெரியுமா... ஏது சார் இவ்வளவு பணம்? நேத்து நான் ட்ராயரைப் பூட்டும் போது உள்ள பணம் இல்லையே."

"நீ வைக்கலன்னா என்ன... நாச்சிமுத்து வெச்சிருப்பான்."

"நாச்சிமுத்துவா? யார் சார் அது?"

"நம்ம வெண்டார்..."

"வெண்டார்னா...?"

"நம்ம புராடக்டை வாங்கிட்டு போய் எக்ஸெஸ் ஓர்க் பண்ணி திருப்பி கொடுக்கற பிசினஸ் பார்ட்டிங்க..."

"அவங்க எப்படி என் ட்ராயர்ல பணத்தை..."

"ஏன் நடுங்கறே... அது உனக்கான பணம்தான். கொஞ்ச நேரம் கழிச்சு நாச்சிமுத்துவே வந்து எதுக்கு பணம் வெச்சேன்னு சொல்வாரு. தெரிஞ்சுக்குவே..."

"சரி... என் பூட்டின் ட்ராயர் சாவி அவர்கிட்ட எப்படி?"

"என்ன சரவணா புரியாம பேசறே... நீ இந்த நூற்றாண்டு மனுஷன் தானே?"

"என்ன சார் சொல்றீங்க?"

"பொறுமையா இரு... அந்த பணத்தை எண்ணு. எவ்வளவு இருக்குன்னு பார்..."

-அவன் எண்ணிவிட்டு சொல்கிறான்.

"இருபதாயிரம்!"

"அதுல ஒரு பத்தை எனக்கு வெட்டு... மீதம் உனக்கு. நாச்சியோட வெண்டார் பில்லை எனக்கு டிக்டேட் பண்ணிட்டு பாஸ் பண்ணு. நான் அதை அக்கௌண்ட்ஸ்க்கு அனுப்பிடுவேன் அவன் பில்லுக்கு கேஷ் அக்கௌண்ட்ஸ்ல செட்டில் ஆயிடும்."

"என்ன பில்?"

"வரும் பாரு..."

"சார் என்ன சார் இது... சம்பளம் சில ஆயிரம், ஆனா முதல்நாள் லஞ்சமே இத்தனை ஆயிரங்கன்னா... வேண்டாம் சார். எனக்கு இந்தபணம்-இந்த மாதிரி பில் எல்லாம் வேண்டாம் சார்..."

"சரி கொண்டா... நான் பாத்துக்கறேன். நீ போய் வேலையப்பாரு. வெளிய யார்கிட்டேயும் மூச்சுவிடக் கூடாது."

"சார் இது தப்பு சார்..."

"வேலையப் பார் சரவணா... எது தப்பு -எது சரின்னு எனக்கு தெரியும்..."

-அவர் அவனை அடக்குகிறார். அவனும் அடங்குகிறான். ஆனாலும் முகத்தில் கசகசப்பு. வியர்வைப் பெருக்கம்.

நேரம் உருண்டோடுகிறது.

அந்த நாச்சிமுத்து என்பவன் வருகிறான்.

சங்கரலிங்க பூபதியிடம் சிரித்துச் சிரித்து பேசுகிறான்.

செய்யாத வேலையை செய்ததாக சொல்லி ஒரு பில்.



அதை ஆமோதித்து சங்கரலிங்க பூபதியே சரவணனை போல டிக்டேட் செய்து சரவணன் கையெழுத்தையும் போடுகிறார்.

"என்ன தலைவா... அசிஸ்டெண்ட் கையெழுத்து போட பயப்படுறாராக்கும்..."

"ஆமாம் நாச்சி... எல்லாம் போகப் போக சரியாயிடும். பத்தாயிரத்தை லூஸ் பண்ணிகிட்டானேன்னு தான் வருத்தமா இருக்கு..."

"வழிக்கு வந்துருவாரா... இல்ல..."

"வந்தாகணும்... இல்லாட்டி வெட்டி விட்ற மாட்டேன்." -பூபதி பேசுவது சரவணன் காதில் விழுகிறது. ஒரு எச்சரிக்கையாட்டம் வந்து இடிக்கிறது. அடிவயிறு பிசையப்பட்ட மாதிரி கோபமும் குழப்பமும் குத்தி குடைகிறது.

'இதை இப்படியே வேடிக்கை பார்ப்பதா?"

கேள்வி பந்து எம்பி எழுகிறது. பிராஞ்ச மேனேஜர் தம்பிதுரை அப்பொழுது விசிட் அடிக்கிறார்.

நாச்சிமுத்துவை பார்த்தும் பார்க்காத மாதிரி சரவணனை பார்க்கிறார்.

"குட்மார்னிங் சார்."

"வெரிகுட்மார்னிங்... ஆர் யூ மிஸ்டர் சரவணன்."

"யெஸ் சார்..."

"வெரிகுட்.... எப்படி இருக்கு சீட்?"

"ஸாரி சார்... எனக்கு கொஞ்சம் கூட பிடிக்கல" -பட்டென்று சொல்லிவிட்டு எழுந்து நிற்கிறான்.

"பிடிக்கலையா?"

"ஆமாம்... கொஞ்சம் கூட பிடிக்கலை! பூட்டின என் ட்ராயர்ல அதோ அந்த நபர் கள்ளச்சாவி போட்டு திறந்து 20 ஆயிரம் ரூபா பணத்த வைக்கறார்.

பார்க்காத வேலைக்கு நாப்பதாயிரத்துக்கு ஒரு பில். அதை நான் பாஸ் பண்ணி அனுப்பணுமாம். நான் மார்க்கெட்டிங் பர்சன். ஆனா ஃபேக்டரி வெண்டார் ரெஸ்பான்சுக்கு என் சீட்டுக்கு ஃபைல் வருது. எனக்கு ஒண்ணும் புரியல. என் மேலதிகாரியும் சரியில்ல. என்னை அடக்கறார்..."

-சரவணனின் பேச்சு மேனேஜரை ஆச்சரியப்படுத்து கிறது.

"என்ன மிஸ்டர் சங்கரலிங்க பூபதி..." -கொஞ்சம் கூட டென்ஷனின்றி அவர் பக்கம் திரும்புகிறார்.

"என்ன சார்?"

"என்ன சாரா... என்னய்யா இது. முத நாளே கம்ப் ளைண்ட்...."

"நான் பாத்துக்கறேன் சார்."

"என்னாத்த பாத்துக்கறே... நாளைக்கு எம்.டி. வரும் போது இப்படி பேசுனா என்னாகறது?"

"நீங்களே சொல்லுங்க சார்..."

"என்னாத்த சொல்ல... எதையெல்லாம் நான் சொல்றது. வாழைப்பழம் பிடிக்காத குரங்கை எல்லாம் ஏன்யா வேலைக்கு எடுக்கறீங்க?"

-மேனேஜர் பேசப்பேச அவர் எப்படி என்பது புரிபட, சரவணன் அதிர்வின் உச்சிக்கே போகிறான். அவர் வேகமாக வந்த வழியே திரும்ப அவன் ஸ்தம்பித்து தலைமேல் கை வைத்துக் கொள்கிறான்.

## 8

**'யோ**கங்களில் கஜகேசரி யோகமும் குருச் சந்திர யோகமும் விசேடமானது. இதில் குருச்சந்திர யோகமுடைய ஒருவன் நான்காம் எண் கொண் டிருப்பின் சோதனைகளுக்கு பின் புடம் போட்ட தங்கமாக மாறி மிகப்பெரும் நிலையை அடைவான். ஜாதகம் இதை உறுதி செய்யும்.'



**மா**மா வீட்டில் தானிருந்தார்.

அசமந்தமாக நுழையும் சரவணனைப் பார்த்து கச்சித மாகக் கேட்கிறார்.

"என்ன சரவணா இன்னிக்கும் பிரச்சினையா?"

"ஆமாம் மாமா... ஆபீஸ்ல தலைல இருந்து கால் வரை எல்லாருமே ஃப்ராடு..."

"என்ன நடந்தது?"

நடந்ததைச் சொல்கிறான். சிரிக்கிறார்.

"சிரிச்சா எப்படி மாமா... நான் முதலாளியை பாக்கப் போறேன்."

"அவரும் மோசமா இருந்தா...?"

"அவருமா?"

"ஆமாம் சரவணா... இவ்வளவு மோசமா ஒரு கம்பெனி இருக்குன்னா அவர்கிட்டையும் ஏதாவது தப்பு தண்டா இருக்கணும்."

"அவர் எப்படி வேணா இருந்துட்டு போகட்டும். ஆனா ஒண்ணு மாமா ... இந்த கம்பெனி உருப்படாது..."

"அதனால..."

"நான் நாளைல இருந்து போகப் போறதில்லை..."

"இது நல்ல முடிவில்ல சரவணா..."

"அப்ப அவங்களோட சேர்ந்து தப்பு பண்ணச் சொல் றீங்களா?"

"அவங்கள திருத்தப் பாரேன்."

"அவங்களையா... நானா... மாமா புரிஞ்சுதான் பேசறீங்களா?"

"முடியும் சரவணா... ட்ரை பண்ணேன்."

"என்ன மாமா நீங்க... நான் என்ன காந்தியா, புத்தனா திருத்த...? ஆஃப்ட்ரால் ஒரு ஒர்க்கர். அதுவும் கன்ஃபார்ம் ஆகாத ஒரு ஒர்க்கர்.

"ஆனாலும் உன்னால முடியும்னு என் மனசு சொல்லுது."

"எதை வெச்சு?"

"டேய்... உன் ஜாதகப்படி உனக்கு இனி யோக காலம். சனி குருவோட கூடி உன்னைப் பார்க்கப் போறான். யாராலையும் உன்னை ஒண்ணும் பண்ண முடியாது. நீ நினைக்கறது ஈடேறும். இரும்பு, சனியோட அம்சம். அங்க உனக்கு பிரச்சினை வரவே வராது."

"வராதா...?" நல்லா இருக்கு... இரண்டு நாள் கூட ஆகலை மாமா. அதுக்குள்ள நான் நொந்து நூலாயிட்டேன். என் ஹெட் இன்னிக்கு பிரிச்சி மேஞ்சுட்டார்.

"நீ பதிலுக்கு பிரிச்ச மேயுடா..."

"அடுத்த நிமிஷம் வீட்டுக்கு அனுப்பிடுவாங்க..."

"சரியான காரணமில்லாம அனுப்பமுடியாது சரவணா..."

"அது கன்ஃபார்ம் ஆனாதான். என்னை என்ன வேணா செய்யலாம்."

"ஏன் இப்படி பயப்படறே. தைரியமா மோது. விடாதே."

"மோதறேன். வேலை போனாலும் கவலையில்லை. ஆனா ஒண்ணு... நீங்க சொல்ற மாதிரி யோககாலம்" என் பேச்சை கேட்பாங்கங்கறது எல்லாம் கனவுல கூட நடக்காது. உங்க ஜாதக நம்பிக்கையை இனி ஒரு முறை என்கிட்ட காட்டாதீங்க..."

-அனல் பறக்க பேசிவிட்டு கிளம்புகிறான் சரவணன்.

செடிகளுக்கு தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள் ப்ரியா. புதிய ஹுண்டாய் காரை பாய்ச்சலுடன் கொண்டு வந்து சிக்கென்று நிறுத்தியபடி இறங்குகிறான் பிரகாஷ்.



"ஹாய் ப்ரியா..."

"ஹாய்!"

"என்ன கார்டனிங்கா..."

"ஆமாம், வாங்க..."

"தேங்க்யூ.. ஆஃப்டர் மேரேஜ் இதை எல்லாம் நானும் பாத்துக்க வந்துடுவேன்." -கண் சிமிட்டுகிறான் பிரகாஷ். அவள் சட்டென்று ஒரு எரிடல். பின் ஒரு சின்னச் சிரிப்பை சிந்துகிறாள்.

"என்ன சிரிக்கறே ப்ரியா?"

"சும்மாதான்... அப்பா உங்களை எப்படியோ கன்வின்ஸ் பண்ணிட்டார் போலிருக்கே..."

"ஆமாம். அவருக்கு உன்னை பிரிய சுத்தமா மனசு இல்லை. பாவமா இருந்துச்சு -அதான் சரின்னு சம்மதிச்சேன்." -அவள் தண்ணீர் ட்யூபை வரப்பில் விட்டு விட்டு, நடந்து கார்டன் ஊஞ்சலருகே சென்று அமர்கிறாள்.

"அப்ப பரிதாபப்பட்டு தான் இந்த கல்யாணத்துக்கு சம்மதிச்சீங்களா?"

"பரிதாபப்பட்டு கல்யாணத்துக்கு சம்மதிக்கல... பரிதாபப்பட்டு வீட்டோட மாப்ளையா இருக்க சம்மதிச்சேன்."

"எனிவே... என் கழுத்துல தாலி கட்டாம விடப்போறதில்ல நீங்க.."

"அதுபத்தி பேசத்தான் வந்துருக்கேன்..." -அவன் சட்டென்று நிறைய ஆச்சரியம் தருகிறான்.

"என்ன பாக்கறே... உனக்கு முழு சம்மதம்னா தான் நான் இதுக்கு ஒத்துப்பேன். உனக்கு என்னை பிடிச்சிருக்கா?"

"பிடிக்கலைன்னு சொன்னா என்ன பண்ணுவீங்களாம்."

"ஒண்ணும் பண்ணமாட்டேன். லெட் அஸ் பார்ட் ஆஃப் ஃப்ரெண்ட்ஸ்னு சந்தோஷமா அதை ஏத்துப் பேன்."

"வருத்தப்பட மாட்டீங்களா?"

"நிச்சயமா... ஆனா அதுக்காக என்ன பண்ணமுடியும்? கல்யாணம்கறது மியூச்சுவலாவும்-முழு சம்மதத்தோடயும் நடக்கணும்கறது என் ஆசை."

-அவன் விசால மனதுடையவன் போல, முற்போக்கு வாதிபோல பேசுவதைப் பார்த்து அவள் தன் சின்னக் கண்களில் ஆச்சரியம் வடிக்கிறாள்.

"என்ன பிரியா சொல்லு... உனக்கு முழு சம்மதம் தானே?"

தலையசைக்கிறாள்.

"தேங்க் காட்... வரட்டுமா?"

"நோ..."

"நோவா..."

"ஆமாம்... உள்ள வந்து ஒரு கப் டீ சாப்பிட்டுதான் போகணும்."

"அப்பா இல்ல."

"அவர் பெட்ராத்தல் ஏற்பாட்ல தீவிரமா இருக்கார். தாஜ்ல டின்னர். அனேகமா தேவாவோட மியூசிக் பார்ட்டி இருக்கலாம். கிராண்டா இருக்கணும்னு சொன்னாராமே உங்கப்பா."

"ஆமாம்... மில்லியனர் ப்ரியாவோட நிச்சயதார்த்தம் சுமா சோமாவா இருக்கலாமா?"

-அவன் மயக்குவதுபோல பேச அவளும் மயங்கிச் சிரித்தபடி நடக்க அவன் தொடர்கிறான்.

அந்த பளபளா மாளிகையின் வராண்டாவில் கால் வைக்கும் போது மெயின் கேட்டில் ஏதோ சப்தம்.

திரும்பிப் பார்க்கிறாள்.



வாட்ச்மேனுடன் சரவணன் மல்லுகட்டிக் கொண்டிருக் கிறான்.

"உள்ளல்லாம் போக முடியாதுய்யா... சொன்னா கேளு."

"நான் அவசியம் முதலாளிய பார்க்கணும்."

"அப்பாய்ன்ட்மென்ட் வாங்கியிருக்கணும்."

"அதுக்கெல்லாம் நேரமில்லப்பா, இது பர்சனல்."

"ஸாரி... யாரையும் உள்ளவிடக் கூடாதுன்னு உத்தரவு."

-வாக்குவாதம் வலுக்க ப்ரியாவின் குரல் இடையில் நுழைகிறது.

"வாட்ச்மேன் அவரை உள்ள விடு."

-வாட்ச்மேன் அடுத்தநொடி அவனை அனுமதிக்க கும்பிட்டபடி உள்ளே நுழைகிறான் சரவணன்.

"வணக்கம் மேடம்..."

"வணக்கம்... நீங்க."

"நான் சரவணன். அந்த ஆஞ்சனேயர் கோவில் பார்ட்டி"

"ஓ... நீங்கதானா? என்ன விஷயம்..."

"எம்.டி. சார் இருக்காரா... அவரைக் கொஞ்சம் நான் பாக்கணும்."

"யார் அப்பாவா?"

"ஆமா... நான் இப்ப உங்க கம்பெனி ஒர்க்கர் மார்க் கெட்டிங்ல இருக்கேன்."

"வெரிகுட். என்ன விஷயம்."

-அவன் தயங்குகிறான். அதை பிரகாஷும் கவனித்து சற்று அதட்டலாய் கேட்கிறான்.

"என்ன விஷயம்ப்பா... சும்மா சொல்லு."

"சார், வந்து..."

"அம்மா சொல்லு... என்ன சமாச்சாரம்."

"அதை உங்க கிட்ட எப்படி சார் சொல்லமுடியும். ஆபீஸ் மேட்டர். ஹைலி கான்ஃபிடென்ஷியல்."

"நானும் ஒரு எம்.டி. தான். சொல்லு."

-அவன் அப்படி சொல்லவும் ப்ரியா அவனை ஒரு மாதிரியாக பார்த்துவிட்டு "பரவால்ல சொல்லுங்க, நான் அப்பாகிட்ட சொல்லிடுறேன்." -என்கிறாள். -அவன் ஆபீஸ் நாற்றத்தை சொல்ல ஆரம்பிக்கிறான். அவளிடம் அதிர்ச்சியின் பரவல். பிரகாஷ் அதிர்ந்தாலும் அவ்வள வாக காட்டிக் கொள்ளவில்லை.

"சரி நீங்க போங்க... நான் விசாரிக்க சொல்றேன்" என்கிறாள்.

சரவணன் திரும்புகிறான்.

ப்ரியாவிடம் கவலைமுகம்.

"என்ன ப்ரியா... இந்தமாதிரி ஆட்கள் சொல்றதை எல்லாம் முதல்ல உண்மையான்னு விசாரிக்காம கவலைப் படாதே" -என்று பிரகாஷ் அவளை நிமிர்த்தப் பார்க் கிறான்.

"இல்ல பிரகாஷ்... அப்பா சரியில்லை... ஆபீஸ் சரி யில்லைன்னு எனக்கும் தெரியும். ஆனா அது இவ்வளவு மோசமா இருக்கும்னு எதிர்பார்க்கலை."

"கவலைப்படாதே ப்ரியா. நான் வரேன்ல எல்லாத் தையும் பிரிச்சு மேய்ஞ்சுடுறேன்."

"நிஜமா..."

"அது என் கடமை ப்ரியா.."

-அவள் அவன் கைகளைப் பற்றி சிலிர்ப்பை காட்டு கிறாள்.



# 9

*'ராசிகளில் சில விநோதமானவை. அதில் விருச்சிகம் ஒன்று. பொதுவில் இந்த ராசியைச் சேர்ந்தவர்கள் பேச்சினால் நண்பர்களை அடைவதை விடவும் பகைவர்களை அடைவது அதிகம் இருக்கும். மௌனம் இவர்களுக்கு நண்பன். ஆனால் மௌனமாயிருப்பது இவர்களுக்கு சவாலான ஒன்று...'*

*-ஜாதக ரத்னம்.*

ஆபீஸ்!

தர்பாராக பிரவேசிக்கிறான் பிரகாஷ்!

வருங்கால மாப்பிள்ளை என்கிற செய்தி பரவியதால் விழுந்து விழுந்து வரவேற்கிறார் மேனேஜர்.

தன் ஏ.சி. அறைக்குள் சோபாவில் அமர்த்தி சூடான காபி தந்து கை கட்டி நின்று விசுவாச வேஷத்தை நன்றா கவே போடுகிறார்.

"உங்க பேர்..."

"தம்பிதுரை சார்..."

"எத்தனை வருஷமா இருக்கீங்க?"

"பாஸ்ட் டென் இயர்ஸா..."

"டர்ன் ஓவர்லாம் எப்படி?"

"நல்லா இருக்கு சார். லாஸ்ட் மன்த் ட்வெண்ட்டிக்ரோர் அசீவ் பண்ணியிருக்கோம்."

"ஐ.சீ... ஆமா நிறைய தப்பு நடக்கறதா கேள்விப் பட்டேனே..." அவன் மெல்ல வளைக்க ஆரம்பிக்கிறான்.

"தப்பா...?"

"தெரியாதமாதிரி நடிக்கவேண்டாம் மிஸ்டர் தம்பி துரை. சரவணன் எல்லாத்தையும் சொல்லிட்டார்..." - மேனேஜர் முகம் உடனே மாறுகிறது.

"சரவணனா... யார் சார் அது?"

"ஓ. சரவணன் யாருன்னே தெரியாதா உங்களுக்கு நியூ அப்பாய்ண்ட்மெண்ட் மிஸ்டர் தம்பிதுரை."

"ஓ... அந்த திருட்டுப்பயலா?"

"என்ன சொல்றீங்க?"

"சார். அவன் வந்த அன்னிக்கே கரப்டடா நடந்துக்க பார்த்தான். கண்டிச்சேன். போட்டு விடுறேன் பார்னு உங்களை வந்து பார்த்துருக்கான்."

"அப்ப இங்க எந்த தப்பும் நடக்கல... அப்படிதானே?"

"எனக்கு தெரியாம எதாவது நடந்துருக்கலாம். தெரிஞ்சு இல்ல சார்..."

-மேனேஜர் தம்பிதுரை பேசிவிட்டு அந்த அகர பொய்யை சொன்னதற்காக தொண்டை வறண்டுபோக மிடறு விழுங்குகிறார்.

"அதை நாச்சிமுத்துகிட்ட கேட்போமா?"

"நாச்சிமுத்துவா... அது யாரது?"

"இப்படி கேக்கறது தான் உங்க மேனரிஸமா மிஸ்டர் தம்பிதுரை"

"சார் அது வந்து..."

"எதுவும் வரவேண்டாம்... போகவேண்டாம். ஓபனா பேசுங்க. ஒவ்வொரு மாசமும் உங்க பங்கு மட்டும் எவ்வளவு வருது?"

"சார் அதெல்லாம் ஒண்ணுமில்ல சார்..."

"சம்பளம் இல்லாம அஞ்சு லட்சம்..."

"சார்ர்ர்..."

"நாலரை..."



"..."

"மூணு..."

"..."

"கமான்மேன் உண்மைய பேசு. உன்னை ஒண்ணும் பண்ண மாட்டேன். அதான் முழுக்க நனைஞ்சாச்சே முக்காடு எதுக்கு இன்னும்..."

"உண்மைய சொல்லிடுறேன் சார். தப்ப நாங்கமட்டும் பண்ணலை. எம். டி. யும் பண்றார்."

"எம். டி. யும் தப்பு பண்றாரா?"

"ஆமாம் சார். நாங்க எவ்வளவு சம்பாதிக்கறோம்கறது பத்தி அவருக்கு கவலையில்லை. அவருக்கு தேவை டர்ன் ஓவர். அதை எப்படியாவது பண்ணிக் கொடுத்துடணும் நாங்க. அதுக்காக நாங்க சில தப்பை பண்ணித்தான் தீரவேண்டியிருக்கு."

"ஐ.சீ... ஆகக்கூடி டாப் டு பாட்டம் யாரும் சரியில்லை. அப்படி தானே?"

"அப்படி சொல்லமுடியாது சார். கஸ்டமர் அவங்களுக்கு ஃபேவர் பண்ண அன்பளிப்பா தராங்க. அது எப்படி?"

-தம்பிதுரையின் விளக்கம் கேட்டு தன் கூலிங் கிளாஸை கழட்டி அதன் வளைந்த ஃப்ரேமை கை விரலில் சுழற்றுபவன் சற்று இடக்காக சிரிக்கிறான்.

அந்த சிரிப்பு தம்பிதுரைக்குள் சற்று கிலி மூட்டுகிறது.

"சார்..."

"நோ பிராப்ளம் தம்பிதுரை. போனதெல்லாம் போகட்டும். இதுநாள்வரை மிஸ்டர் சோம்நாத் ஃபேக்டரியா இது இருந்தது. இனி இது என் கன்ட்ரோலுக்கு வரப் போகுது. ஸோ-உங்களை நீங்க மாத்திக்கணும். மாத்திக் கலைன்னா நான் உங்களை மாற்றும்படியாயிடும். என்ன?"

-தம்பிதுரை அடுத்த நொடி "சார்..." என்று கை கூப்பிக்கொண்டு எழுந்து அப்படியே அவன் காலில் விழுகிறார். அவன் அதை ரசிக்கிறான்.

"அப்புறம் இன்னொரு விஷயம்..."

"சார்..."

"அந்த சரவணனை வெளிய அனுப்பிடுங்க."

"வெளிய வா?"

"ஆமாம். அவனை மாதிரி நபர்கள் எனக்கும் ஆபத்து தான்."

"தேங்க்யூ சார்... தேங்க் யூ."

"எப்படி அனுப்புவீங்க?"

"வெரிசிம்பிள். எதாவது திருட்டு கேஸ் போட்டு..."

"முதல்ல செய்யுங்க... அப்படியே டெய்லி எனக்கு ஒரு ஃபாலோ அப் தர மறந்துடாதீங்க..."

"ஃபாலோ அப்...?"

"ஆமாம் தம்பிதுரை... லீகலா நான் எம். டி. ஆக கொஞ்சநாள் ஆகலாம். அதுவரை ப்ரியாதான் பார்த்துப்பா. அவளுக்கு என்ன தெரியும் . நான்தானே பாத்துக் கணும்."

"ஓ. கே. சார்... ஓ. கே... ஓ. கே..."

-தம்பிதுரை குரலில் தந்தியடிக்கிறார்.

அவன் சிரித்தபடி கிளம்புகிறான்!

## 10

'எந்த ஒரு ராசியினனுக்கும் சந்திராஷ்டமம் கொடுமையானது. ஒருவன் ராசியில் சந்திரன் அஷ்டம ஸ்தானமான எட்டாமிடம் வருவதையே சந்திராஷ்டமம் என்கிறது ஜாதக சாஸ்த்ரம்.

குறிப்புதவிநூல்



அந்த சந்தர்ப்பத்தில் சந்திரனின் தண்ணொளி குறிப்பிட்ட ராசியில் படாது போக மனம் நெருப்பாக தகிக்கும். கோபதாபம் மிகும். வம்பு வழக்கு கூடும். நிதானம் பிடிபடாது. இறை பக்தி ஒன்றே காப்பாற்றும்.'

டியூட்டி முடிந்து கிளம்பும்போது செக்யூரிட்டி செக்கப் நிகழ்கிறது. சரவணனின் மொபட்டையும் ஒரு செக்யூரிட்டி மறிக்கிறார்.

"என்னை எதுக்குய்யா மறிக்கறே?" 578432

"செக்பண்ணணும்." 894.8113 IND

"நான் ஆபீஸ் கேட்டகரி..."

"யாரா இருந்தாலும் செய்யச் சொல்லி உத்தரவு..." -செக்யூரிட்டி அதிர்ச்சி அளிக்கிறார்.

அதே போல அந்த வாகனம் சோதனையும் இடப்படுகிறது. சோதனையில் மொபட் லக்கேஜ் பாக்ஸில் ஒரு நட் பாக்கெட் இருக்கிறது.

"என்ன இது?"

"ஐய்யோ என் வண்டியில் எப்படி வந்தது?"

"அதை பர்சனல் என்கொயரில சொல்லுங்க. இப்ப ஓரமா போய் நில்லுங்க..."

-செக்யூரிட்டி அவனை ஓரம் கட்ட, போகின்ற வருகின்ற அத்தனை பேரும் அவனைப் பார்க்க அவனுக்கு ரத்தமே கண்டுகிறது.

தனது மேலாளரின் திருவிளையாடல் என்பது புரிந்தாலும் அதை எப்படி நிரூபிப்பது?

செக்யூரிட்டி நிழலில் குறுகிப் போய், நிற்பவனை பார்த்து ஹெட்வாட்ச்மேன் கேட்கிறார்.

"எம்ப்பா தம்பி... இப்பதானே வேலைக்குச் சேர்ந்த அதுக்குள்ள கையை நீட்டிட்டியே..."

CONNEMARA ... 10 MAY 2004

"ஐயோ... நான் திருடனில்லை. எனக்கு ஒன்னும் தெரியாது."

"எல்லா திருடனோட டயலாக்கும் இதுதானப்பா..." அவர் சொல்லும்போதே இன்டர்காம் சரவணனை உள் அழைத்து வரச் சொல்கிறது.

"போ... போ... உள்ள கூப்பிட்றாங்க. செக்யூரிட்டி ஆபீசர் என்கொயரி பண்ணப் போறாராம். போ... போ..." -ஆடு, மாடை விரட்டுகிற தொனியில் விரட்டுகிறார் ஹெட் வாச்மேன்.

ஒருவன் மட்டும் நின்று பார்க்கிறான்.

நெருங்கி வருகிறான்.

"என் பேர் முரளி... அக்கௌண்ட்ஸ் கிளார்க். உன் மாதிரிதான் நான். ஆனா நான் முதலாளிவரை போய் கம்ப்ளைண்ட் பண்ணலை. அதனால வேலைல இருக்கேன். நீ போய்ட்டே போல இருக்கு. அதான் கழட்டிவிட வழிபார்த்திருக்காங்க." -கச்சிதமாக அளந்து காதோரமாய் பேசுகிறான்.

"இது ஆனாலும் அநியாயம் மிஸ்டர் முரளி. என் வயித்தெரிச்சல் இவங்களை எல்லாம் சும்மாவிடாது..."

"ஸாரி மிஸ்டர் சரவணன். நாம இன்டர்நெட்யுகத்துல இருக்கோம். இங்க வலுத்தவனுக்கு தான் காலம். சாபங்களால பிரயோஜனமில்ல."

"எனக்கா பரிதாபப்படுறீங்களே... எனக்கு உதவுங்களேன்."

"அதுக்குதான் வந்துருக்கேன். தனி மனிதனா நின்று விவேகமில்லாம போராடாதீங்க. அடியாப்டுவீங்க. அடியாப்ட்டீங்க. போனது போகட்டும்னு அப்பாலஜி கேட்டுட்டு வெளிய போய்டுங்க. இல்லேன்னா உங்களை உள்ள போட்டு கம்பி எண்ணக் கூடவெச்சுடுவாங்க."

"நான் என்ன தப்பு பண்ணினேன் மிஸ்டர் முரளி. எதுக்கு அப்பாலஜி கேட்கணும்."



"நிர்வாண மனுஷங்களுக்கு நடுவுல கோவணம் கட்டியிருக்கீங்களே... தப்பு இல்லியா? தலைமுதல் கால் வரை சரியில்லாத கம்பெனி உருப்படணும்னு நினைச்சீங்களே. தப்பு இல்லியா?"

"இதெல்லாமா தப்பு..."

"ஸாரி... புரிஞ்சுக்க முடிஞ்சா உங்களுக்கு நல்லது. இல்லே... வெரிஸாரி!" -முரளி நைஸா நழுவுகிறான்.

அழுகை வருகிறது சரவணனுக்கு.

துடைத்து விட்டு கொள்கிறான்.

எல்லோரும் பார்க்கின்றனர்.

அப்படியே என்கொயரி ஹாலுக்கு அழைத்துச் செல்லப்படுகிறான். ஸாரி இழுத்துச் செல்லப்படுகிறான்.

"வாய்யா புதுமைப்பித்தா... எத்தன நாளா இந்த பழக்கம்?" -செக்யூரிட்டி ஆபீசரின் ஆரம்பமே குத்துகிறது.

"சார்... எனக்கு எதுவும் தெரியாது. நான் நிரபராதி..."

"உம்... அப்புறம்...?"

"நான் என்ன கதையா சொல்றேன்... அப்புறம் கறீங்க..."

"கதை கூட கொஞ்சம் நம்பும்படி இருக்கும்."

"சார் என்னை நம்புங்க. யாரோ என்மேல பழிபோட இப்படி பண்ணியிருக்காங்க."

"உம்... அப்புறம்..."

"என்ன சார் திரும்ப அப்புறம். இங்க எல்லாருமே திருடங்க. இன்க்ளுடிங் யுவர் செல்ஃப்! என்னை வெளிய அனுப்ப இது ஒரு ஏற்பாடு. எல்லாம் எனக்கு தெரியும். நான் வெளிய போயிட்றேன். சார். இனி உங்க வழிக்கே வரலை. விட்டுடுங்க சார்..."

-ஆபீசர் சிரிக்கிறார்.

"என்ன சார் சிரிக்கிறீங்க... நான்தான் போறேன்னு சொல்றேன்ல..."

"அப்படியா?"

"ஆமாம்... ஆனா ஒண்ணு. உங்களை அந்த ஆண்டவன் சும்மா விடமாட்டான்."

"ரொம்ப பேசறீயே... உன்னை இப்படியே அனுப்பினா நீ வெளிய போய் புலம்புவியே."

"பின்ன... பாதிக்கப்பட்டவன் புலம்பாம வாழ்த்துவானா?"

"சரி... இனி உன்கிட்ட பேசறதுல பிரயோஜனமில்ல. நீ நம்ம ஏரியா இன்ஸ்பெக்டர் கிட்ட பேசு. அதான் சரி..." -ஆபீசர் அவன் முகம் போகும் போக்கைப் பற்றி கவலைப்படாமல் தொலைபேசியை சுழற்றத் தொடங்குகிறார்.

"சார்ர்... சார்ர்..."

-ஊஹூம் அவர் மசியவேயில்லை! முரளி சொன்னது சரிதான்!

## 11

*'திசைகளில் சுக்ர தசை விசேஷமானது. நாற்பது வயதுடைய ஒருவருக்கு சுக்ரதசை வரும் பட்சத்தில் அது மிக அனுகூலமானது. ஆனால் வாலிப, பிராயத்தில் அந்த தசை ஜாதகரை காமாந்தகராக்கி விடக் கூடியது. ஜாதகர் பட்டு உடுத்தி பூஜித்து சாந்திபெற வேண்டும்.'*

*-ஜாதக ரத்னம்*

**சோ**ம்நாத்தை பார்க்க பார்கவா வந்திருந்தார். வரவேற்பில் படுதடபுடல்.

நிச்சயதார்த்த பத்திரிகை அச்சாகி வந்திருந்தது.



மஞ்சள் தடவிய அதன் முதல்பத்திரிகையை வெற்றிலை பாக்கு பழத்தட்டில் வைத்து பார்கவா எதிரில் நீட்டுகிறார் சோம்நாத்.

"குரு... எடுத்துக்குங்க. நாளைக்கு நிச்சயதார்த்தம் முன்ன நின்னு நடத்தி தரணும்."

"சந்தோஷம் சோம்நாத். ரொம்ப சந்தோஷம்." -வாங்கும் போது எப்படியோ கை தட்டி பழத்தட்டு கவிழ்ந்து பத்திரிகையும் கீழே விழுகிறது.

சோம்நாத் பதறிப்போகிறார்.

"ஸாரி குருவே... வெரி ஸாரி... வெரிவெரிஸாரி..."

"பரவால்ல விடு. உக்காரு. பதட்டப்படாதே. ஆமா எங்க ப்ரியா...?"

"கோயிலுக்கு போயிருக்கா..."

"தனியாவா?"

"அ... ஆமா..."

"என்ன ஆமா... நான் ஏற்கனவே சொல்லியிருந்தும் நீ கேட்க மாட்டேங்கறியே..."

"நான் கேட்கறேன் குரு... என் பொண்ணு தான் கேட்க மாட்டேங்கறா..."

"கேட்கணும். நீ கேட்க வைக்கணும். இல்லேன்னா உன் பொண்ணு உனக்கு இல்லை."

"என்ன குரு... அடிக்கடி இதையே சொல்லி பயமுறுத்தறீங்க..."

"நான் பயமுறுத்தலை சோம்நாத். அவ கிரகங்கள் பயமுறுத்துது."

"சரி குரு... இனி நான் அவளை வெளியே அனுப்பலை."

"அது மட்டும் போதாது சர்வஜாக்ரதையா பார்த்துக்கவும் செய். அவளுக்கு அபகீர்த்தி ஏற்படலாம்."

"அபகீர்த்தியா?"

"ஆமாம். அவன் ஜாதகத்துலையும் சரி, கைல சக்ரமேட்டுலையும் சரி எதுவுமே சரியில்லை. கருப்பு புள்ளி வேற பாம்ரேகை மேல விழுந்துருக்கு."

"..."

"அவன் ஏமாற்றப்பட நிறைய வாய்ப்பிருக்கு. ஜாக்கிரதை"

"இதுவரை அப்படி எதுவும் நடக்கலை. இனியும் அப்படி நடக்க விடமாட்டேன். அதான் நீங்க இருக்கீங்களே..."

"யார் இருந்தாலும் விதி எப்பவும் வலிமையானது சோம்நாத். நம்மை நம்ம புண்யங்கள் தான் காப்பாற்றும்." -பார்கவா பேசப்பேச சோம்நாத் முகத்தில் கறுமை பரவிக் கொண்டே போகிறது.

"கவலைப்படாதே... எல்லாம் உன் நல்லதுக்கு தான் சொல்றேன்."

-அவர் சொல்லி நிறுத்தவும் எதிரில் வந்து நிற்கிறான் பிரகாஷ்.

"வாங்க மாப்ளை..."

"இருக்கட்டும் மாமா... என்ன ஏதோ சீரியஸா டிஸ்கஷன்"

"ஒண்ணுமில்ல மாப்ளை... சும்மாதான். இவர் என் குரு... பெரிய ஜோசியர் பார்கவான்னு பேர்."

"அப்படியா?" -கேள்வியோடு அவரை சற்று அலட்சியமாக பார்க்கிறான் பிரகாஷ். அவருக்கு ஒரு வணக்கம் சொல்லக் கூட தோன்றவில்லை.

"இவர்தான் மாப்ளையா?"

"ஆமாம் குரு... என்னைப் போலவே இண்டஸ்ட்ரியலிஸ்ட்...."

"ஐ சீ... இவர் ஜாதகத்தையா நான் பார்த்தேன்."

"ஆமாம் குரு... பார்த்து பத்து பொருத்தமும் இருக்கிறதா சொன்னீங்க..."



-சோம்நாத் பார்கவாவிடம் சொல்லும் போதே அங்கிருந்து நழுவி பிரியாவை தேட ஆரம்பிக்கிறான் அவன்.

பார்கவா அதை பார்த்து சற்று சலனப்படுகிறார். சோம்நாத்தும் அதை புரிந்துகொள்கிறார். சமாளிக்க பார்க்கிறார்.

"அது வந்து மாப்ளைக்கு இந்த ஜோசியம் ஜாதகத்துல எல்லாம் அவ்வளவா நம்பிக்கை கிடையாது. அதான்..."

"இல்லையே... இருக்க வாய்ப்பே இல்லையே..."

"எதைவெச்சு சொல்றீங்க குரு."

"அவர் ஜாதகத்தை வெச்சுதான். நான் பார்த்த ஜாதகப்படி அந்த நபர் அசாத்ய கடவுள் நம்பிக்கையும், தெய்வக் கலைகளான ஜோதிடத்தையும் சாஸ்த்ரத்தையும் நம்பறவரா இருக்கணுமே..."

"அப்படியா?"

"ஆமாம் சோம்நாத்... இப்படி இருக்க வாய்ப்பில்லை."

"என்ன குரு... ஜாதகத்தை வெச்சு ஒருத்தர் எப்படி இருப்பார் என்ன செய்வார்னுல்லாமா சொல்லமுடியும்?"

"மூச்சுக்காத்து எப்ப நிக்கும்னு சொல்லமுடியும் சோம்நாத். சரியா கணக்கு போட தெரியணும்."

"அப்ப..."

"மாப்ளையை கொஞ்சம் கவனி, நான் வரேன்," -பார்கவா சொல்லியபடி எழுந்து கொள்ள கலவரப்பட்டு சோம்நாத் பார்க்க அதை ஒரு மூலையில் நின்று கவனிக்கும் பிரகாஷ் அடுத்த நொடியே தன்னை மாற்றிக் கொண்டவனாக வேகவேகமாக அவர்களை நோக்கி வருகிறான்.

அதற்குள் பார்கவா போர்டிகோவில் நிற்கும் கார் அருகே சென்று விட்டாலும் அவன் விடவில்லை.

"சார் ஒரு நிமிஷம்." -நிறுத்துகிறான்.

அப்படியே சரிந்து காலில் விழுகிறான்.

"என்ன இது, எழுந்திருப்பா..."

"இருக்கட்டும் சார்... ஹால்ல சாய்பாபா படம் இருந்தது. அவர் பெரிய மகான். அவர் படம் இருக்கற இடத்துல மற்ற யாரையும் வணங்கறது சரியில்லைனு சொல்வாங்க. அதனாலதான் உங்கள பார்த்த உடனே வணங்கலை. தப்பா எடுத்துக்காதீங்க..."

-காதில் பெரிய பூவாக -ஆனால் வைப்பது தெரியாமல் வைக்கிறான்.

பார்கவா அர்த்த புஷ்டியோடு சிரிக்கிறார். கைகளை உயர்த்தி ஆசீர்வதித்து விட்டு "எண்ணம் போல் வாழ்க்கை" -என்று கூறியபடியே காரில் ஏறுகிறார்.

சோம்நாத் நெகிழ்ந்து போகிறார்.

சிலவினாடி முன்வரை கசங்கி இருந்தவர் இப்பொழுது கலகலப்புக்கு மாறுகிறார்.

"நல்ல வேளை... மாப்ளை பார்கவா சொன்னது போல கவலைக்குரியவர் இல்லை!"

## 12

'ஒன்பது கிரகங்களோடு கண்டறியப் படாத பலநூறு கிரகங்களை உடையது தான் நம் பூலோக பிரபஞ்சம். ஆயினும் ஒன்பது கிரகங்களின் கதிர்வீச்சு மட்டுமே நம் பிரபஞ்சம் மேல் படுவதால் அவைகளை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்கிறோம். அந்த ஒன்பதின் நடமாட்டத்தில் மனிதன்தான் என்னமாய் பொம்மை போல ஆடுகிறான்!"

-ஜாதகரத்னத்திலிருந்து...



கழுத்துச் சங்கிலியை அடமானம் வைத்து ஐந்தாயிரத்து சில்லரை வாங்கி அதைக் கொண்டுபோய் போலீசில் கொடுத்து ஜாமீன் கட்டி சரவணனை வெளியே அழைத்து வருகிறார் மாமா மரகதலிங்கம்.

வெளியே வரும்போதே முறைக்கிறான்.

உடைந்து போன கூடைத்தக்காளி போல் இருக்கிறது முகம்.

"கவலைப்படாதப்பா... எல்லாம் அனுபவம்" -என்று வேதாந்தி போல பேசுகிறார் அவர்.

"அனுபவமா?"

"வேற என்ன இது?"

"வெங்காயம்... நீங்க என்ன சொன்னீங்க. ஞாபகம் இருக்கா?" -அவர் இடறிப் போய் மிரளுகிறார்.

"எனக்கு யோக ஜாதகம்... நான் சொல்றதெல்லாம் நடக்கும். இரும்புக்கும் எனக்கும் உள்ள உறவை யாராலும் பிரிக்கமுடியாது. நான் பெரிய நிலைக்கு வரப்போறேன் அப்படி இப்படின்னு என்னல்லாம் சொன்னீங்க..."

"ஆமாம் சரவணா... உன் ஜாதக பலனைத் தான் சொன்னேன்."

"எப்படி மாமா, அதுல இந்த போலீஸ் லத்தியால அடிபடுற யோகத்தை சொல்ல மறந்தீங்க...?"

". . ."

"சொல்லுங்க மாமா... ஏன் பேசமாட்டேங்கறீங்க? யோகமாம் யோகம். வாழ்க்கையே போச்சு மாமா?"

டேய் நான் உன் வழிக்கே வரலைன்னு கூட சொன்னேன். கேட்கல. திருட்டு பழி போட்டு உள்ள உக்காத்தி வெச்சுட்டான்" -விசும்பி விசும்பி அழத் தொடங்குகிறான் சரவணன். நடுவீதி என்றும் நினைக்கவில்லை.

"இதோ பார் சரவணன்... நீ ஆம்பள -இப்படி அழலாமா? தெருவுல எல்லாரும் பாக்கறாங்க பார்..."

"பாக்கட்டும் நல்லா பாக்கட்டும். என்னை எதுக்கு ஜாமீன்ல எடுத்தீங்க மாமா? உள்ள இருந்திருந்தா உக்காரவெச்சு சோறு போட்டுருப்பாங்க. வெளிய என்னை இனி எவன் மதிப்பான். லாக்கப்ல இருந்தவன்னு தானே பேசுவாங்க?"

"டேய்... ரொம்ப டென்ஷனாகாதே. பிரச்சினைவரும் போதுதான் திடமா இருக்கணும். தெளிவாவும் சிந்திக்க ணும். இப்படி கரைஞ்சு உருகறவன் சராசரிக்கும் கீழே..."

"நான் கீழதான்... கீழையே இருந்துட்டு போறேன். போதும் மேல இருக்க ஆசைப்பட்டு அதுக்கு பட்டபாடு. மாமா ... நான் நிறைய தெலுங்கு சினிமா பார்ப்பேன். டப்பிங் படங்களைச் சொல்றேன். அதுல வில்லன் ரொம்ப வித்தியாசமா இருப்பான். உருவம் தான் மனுஷ உருவமா இருக்கும். மத்தபடி பேசறது நடந்துக்கறது எல்லாம் நம்மளால நினைச்சே பாக்கமுடியாது. அப்படி பயங்கரமா இருக்கும். சினிமா கதைதானேன்னு கதாசிரியர் இஷ்டத்துக்கும் சீன் விட்டுறுக்காருன்னு நினைச்சுப்பேன்.

ஆனா இப்ப சொல்றேன் மாமா... என் வாழ்க்கையும் அந்த டப்பிங் படம் மாதிரி ஆயிடிச்சு. ஆனா என்னால அந்தப் படத்து ஹீரோ போல பத்துபேரை அடிக்க முடியாது. அவ்வளவுதான் வித்தியாசம்."

திரும்ப கரைகிறான் சரவணன். தோள்மேல் கைபோட்டு சமாதானப்படுத்திப் பார்க்கிறார் மரகதலிங்கம். அவனுக்கு வலிக்கிறது. அவர் கை வைத்த இடத்தில் கத்தித்தழும்பு. அவர் கண்ணே நீர்க்குட்டையாகிறது.

எப்படியோ இருவரும் வீட்டை அடைகின்றனர்.

அம்மா புடவை முந்தியை வாயில்வைத்து அழுத படியே அழுகிறாள். தங்கை பாரதி அதற்கும் மேலே...



"என்னடா தம்பி இப்படி ஆயிடுச்சு. நாம யாருக்கு என்ன கெடுதல்டா செஞ்சோம்..." -வெடிக்கிறாள் காமாட்சி.

"ஒழுங்கா இருக்க நினைக்கிறது தான்மா கெடுதல். தனியால்லாம் செய்ய வேண்டாம்மா." -அவனும் வெடிக்கிறான். பாரதி நெருங்கி வந்து" விடுண்ணே... நாட்ல வேற கம்பெனியே இல்லையா என்ன?"

"ஆமாமாம்... அங்கியும் நாலு லஞ்சப்பேய் இருக்கும். அது என்னை பிடிக்கும். அடிக்கும். வாங்கிக்கவேண்டியது தான்."

-பேச்சில் ஒரு தர்ம புத்திரனின் ஆதங்கம். கச்சிதமாக உள் நுழைகிறாள் அத்தை அகிலாண்டம்.

"என்னென்னமோ கேள்விப்பட்டேனே -எல்லாம் நிஜமா" -என்று கேட்பவள் சரவணனை பார்த்து அப்ப டியே ஓடிவந்து கட்டிக் கொள்கிறாள்.

"என்னாச்சு தம்பி..."

"என்னத்த சொல்வேன் அத்த. திருடாதீங்கடான்னேன். என்னை திருடனாக்கிட்டாங்க..."

"அப்ப நீ திருடலியா?"

"அத்த... எனக்கு ஏன் அத்த அந்த அற்ப புத்தி?"

"போலீஸ்கிட்ட சொல்லவேண்டியதுதானே?"

"தூங்கறவங்கள எழுப்பலாம். நடிக்கறவங்கள...?"

"சரி இப்ப வேலை இருக்கா... இல்ல போயிடிச்சா?"

"எப்படி அத்த இருக்கும்... புரியாம கேக்கறியே..."

-பாரதியின் குறுக்கீடு அத்தையை அப்பளம் போல் நொறுக்குகிறது. ஒரு ஓரமாக போய் நின்றுகொள்கிறாள்.

"ஆமாம்... எங்க கௌசல்யா?"

"அவ... அவ..."

"அவளுக்கு என்ன?"

"அத்தான் இப்படி பண்ணி மாட்டிகிட்டாரேன்னு வீட்ல அழுதுகிட்டிருக்கா..."

"அப்ப உன் பொண்ணு என் அண்ணன் தப்பு பண்ணிட்டதாவே நம்பிட்டாளா?"

-அத்தையின் கனமான மௌனம் ஆமோதிக்கிறது.

"என் அத்த... இவ்வளவுதானா நீயும் உன் மகளும் என் அண்ணனை புரிஞ்சு வெச்சகிட்டிருக்கறது?"

-திரும்பவும் கனமான மௌனம் அகிலாண்டத்திடம். அது சரவணனை மேலும் கொல்கிறது.

மாமா, வேறு எதுவும் பேசாமல் வாசலில் நாற்காலியில் அமர்ந்து கொண்டிருக்கிறார். கையில் பஞ்சாங்கம். அவனுக்கு எரிச்சல் பிறிடுகிறது. அவரை நெருங்கி அந்த பஞ்சாங்கத்தை தூக்கி எறிகிறான். நெருப்பாய் கண்கள் சிவக்க முறைத்துப் பார்க்கிறான்.

"எதுக்கு பஞ்சாங்கத்தை தூக்கி எறிஞ்சே?"

"என் அத்தை சொன்னது காதுல விழலை?"

"அவங்க சொல்லாததும் காதுல விழுந்தது சரவணா..."

"என்ன குழப்பறீங்க?"

குழப்பல சரவணா... இன்னும் சில மணிநேரங்கள் பொறுத்துக்கோ. உன் வாழ்க்கையே மாறப்போகுது."

"நான் ஒன்னு கேட்டா நீங்க ஒன்னு சொல்றீங்க. இந்த பஞ்சாங்க பேச்செல்லாம் வேண்டாம். போதும்... என் கேள்விக்கு பதில் சொல்லுங்க..."

"என்ன சொல்லனும்?"

"அத்த பொண்ணே என்னா தப்பா நினைக்கறா?"

"ரொம்ப சந்தோஷம்."

"மாமா..." -அவன் நரம்பு புடைக்க கத்துகிறான்.

"கத்தாதே சரவணா. எல்லாம் சரியாதான் நடந்து கிட்டிருக்கு."



"என்ன சரியா... என் அத்த பொண்ணே என்னை தப்பா நினைக்கும் போது நான் எதுக்கு இனிமே உசிரோட இருக்கனும்." அவன் விசும்புகிறான்.

"சரி. என்ன செய்யலாம் சொல்லு..." -அவர் திருப்பு கிறார்.

"நான் இப்பவே கௌசல்யாவை பாக்கறேன். நீ எப்படி என்னை தப்பா நினைக்கலாம்னு கேக்கறேன். என்னை கட்டிக்க போற நீயே இப்படி தப்பா நினைச்சா உலகம் ஏன் நினைக்காதுன்னு கேக்கறேன்."

"அவ ஊர்ல இல்ல சரவணா" -அத்தை நிதானமா ஒரு குண்டைப் போடுகிறாள்.

"ஊர்ல இல்லையா?"

"ஆமாம். உன் நிலை பத்தி தெரிஞ்சதும் அவளுக்கு இங்க இருக்க பிடிக்கல. யாரைப்பார் உன் விஷயம் பேசியே அவளை நோகடிச்சாங்க. பார்த்தா. சுசீந்தரம் கிளம்பிட்டா."

"எங்க சித்தப்பா வீட்டுக்கா?"

"ஆமாம். சின்ன அண்ணனும் இப்ப என்ன, சரவணன் இல்லேன்னா என் மகன் கதிரேசன் இருக்கான், நிச்சயித்த நிச்சயித்தபடி முடிச்சிடலாம்னு சொல்லிட்டாரு."

-அத்தை அவன் நெஞ்சில் நன்றாக மையம்பார்த்து கட்டியை மிக நிதானமாக செருகி அழுத்துகிறாள்.

"அத்த..."

"என்னை என்னப்பா பண்ணச் சொல்றே? உனக்கு வேலையும் போயாச்சு. போலீஸ் கேஸ் வேற -உன் பிரச்சினை எப்ப தீருமோ -எப்படி தீருமோ...

ஆனா கௌசல்யாவுக்கு வர்ற தை முடியறதுக்குள்ற கல்யாணம் பண்ணலைன்னா அப்புறம் எப்பவுமே நடக்காதுன்னு சொல்லிட்டார் ஜோசியர். ஒரு தடவை கல்யாணம் தட்டினா மூணுதடவை தட்டுமாமே...?"

-அத்தை தன் வேஷம் கலைக்கிறாள். மாமா சிரிக்கிறார். சற்று வாய் விட்டே...

சரவணன் ஒரு பைத்தியம் போலாகி அவரை ஆவேசத்துடன் நெருங்கி சட்டையை எத்திப் பிடிக்கிறான்.

"என் நிலை உங்களுக்கு சிரிப்பா இருக்கா?"

"இது சந்தோஷ சிரிப்புடா?"

"என் கௌசல்யா எனக்கில்லேங்கறது உங்களுக்கு சந்தோஷமா?"

"உன் கௌசல்யாவா... பைத்தியக்காரா... நீயே உனக்கு சொந்தம் இல்லடா."

"வேதாந்தமா பேசறீங்க... உங்கள..." -அவரை பிடித்து தள்ளுகிறான். அவர் சாய்ந்த தென்னைமட்டையாக உதிர்ந்து விழுகிறார். அம்மா ஓடிவருகிறாள்.

"டேய்... உனக்கு என்னடா ஆச்சு?" -அவனை இறுக்கிப் பிடிக்கிறாள்.

"போஸ்ட்!" -கத்தரிப்பாய் வாசற்புறமிருந்து குரல். பாரதி தான் போய் கடிதத்தை வாங்குகிறாள்.

இன்விடேஷன்.

கம்பெனி அனுப்பியிருக்கும் இன்விடேஷன்!

"அது என்ன தபால்டி.."

"அண்ணனோட அருமைக் கம்பெனி முதலாளி மகள் ப்ரியாவுக்கும் பிரகாஷ்ங்கறவனுக்கும் இன்னிக்கு நிச்சயதார்த்தமாம். அதுக்கு அழைப்பு தொழிற்சாலை வளாகத்துலேயே நடக்குதாம்" -பாரதி இன்விடேஷனை விழிகளால் மேய்ந்தபடி பொருமுகிறாள்.

சரவணன் பாய்ந்து வந்து இன்விடேஷனைப் பிடுங்குகிறான்.

இரண்டு நாட்களுக்கு முன் போஸ்ட் செய்த இன்விடேஷன். பிரச்சனை 24 மணிநேரத்துக்குள் தானே?



"டேய்... பிள்ளையை கிள்ளி விட்டுட்டு தொட்டிலையும் ஆட்றீங்களா, உங்களை..."

-சரவணன் அம்பாட்டாம் பாய்ந்து வெளியேறுகிறான்.

"டேய்... டேய்..." -கத்துகிறாள் காமாட்சி.

"போகட்டும் விடு காமாட்சி." மாமா பதட்டமேயின்றி சொல்கிறார்.

"என்னண்ணே நீங்க. உங்களையே சட்டையை பிடிச்சவன் அங்க போய் எதையாவது பண்ணி வெச்சா சிக்கல் இன்னும் அதிகமாகும்?"

"நல்லா சொன்னு. நல்லவேளை நாங்க தப்பிச்சோம்." என்று அகிலாண்டம் கிளம்ப ஆயத்தமாகிறாள்.

அரைமணி நேரம்தான்.

அந்த அரைமணியில் ஒருபுயல் அடித்து பெருமழை பெய்து, அந்த வீடும் மூழ்கினது போலாகிவிட்டது.

ஆனால் மரகதலிங்கத்திடம் மட்டும் துளிகூட பதட்டமோ கவலையோ இல்லை.

ஜாதகம் மேல் அத்தனை நம்பிக்கை.

## 13

*"சனியை போல கொடுப்பாரும் இல்லை. கெடுப்பாரும் இல்லை. கொடுக்கும் முன் அவன் தகுதியறிய சோதிப்பான். அதில் தேற வேண்டும்!"*

ஃபேக்டரி...

வாழை, கமுகு, தோரணம் என்று கல்யாண லட்சணம் களைகட்டி கொண்டிருக்கிறது.

பளபளப்பான கார்களின் பிரவேசம் வேறே!

புதிய கோட் சூட்டில் ஓடியாடிக் கொண்டிருக்கிறார் சோம்நாத்.

நிச்சயம் நடத்தும் சாக்கில் அப்படியே பிரகாஷை தொழிலாளர்களுக்கு அறிமுகம் செய்து இனி இவன்தான் உங்கள் வருங்கால முதலாளி என்று சொல்லாமல் சொல்லிவிடவேண்டும்!

மகளையும் நான் அனுப்பப் போவதில்லை. அவள் தான் இனி உங்கள் சேர்மன் என்று சொல்லிவிட வேண்டும்...

-அவருக்குள் இப்படி பல தீர்மானங்கள். ஊழல் கூட்டம் கூடவே ஓடியாடி அவர் நிழலைக் கூட தாங்கிப் பிடிக்கப் பார்க்கிறது.

பர்சனல் ரூமில் சிம்பிளான மேக்கப்பில் ப்ரியா.

உள்ளே நுழைகிறான் பிரகாஷ்.

"ஹாய் டியர்."

"ஹாய்!"

"குட்... ரொம்ப சிம்பிளா இருக்கியே. பட்டுப்புடவை கூட கட்டிக்கலையா?"

"வேண்டாம் பிரகாஷ். இதுக்கென்ன நல்லாதானே இருக்கு?"

"உனக்கு கதர்ப்புடவை கூட ராஜகளையா இருக்கும் ப்ரியா. இருந்தாலும் லேபர்கள் சீப்பா நினைச்சுடக் கூடாது பாரு..."

"ஸாரி பிரகாஷ்... லேபர் எக்ஸிகியூடிவ்னு பிரிச்சு பார்த்து தாழ்த்தி பேசவேண்டாமே."

"நான் தாழ்த்தல ப்ரியா. இண்டஸ்டரி ஐடெண்டிஃபிகேஷன் வேர்ட் அது"

"நாம மாத்துவோமே... இந்த ப்ரியா பாசனர்ஸ் பார்ட்னர்ஸ் அவங்க அப்படி மாத்துவமே."

"என்ன ப்ரியா... திடீர்னு ஸ்டண்ட்டெல்லாம் அடிக்கறே?"



"இட்ஸ் நாட் எ ஸ்டண்ட் என் கனவு அது. அதனால தான் நிச்சயதார்த்தத்தைகூட ஹோட்டல்ல வைக்காம இங்க லேபர்ஸ் முன்னால் வைக்க சொன்னேன். இவங்களையும் அழைக்க சொன்னேன்."

"நோ புள்தாட் மறுக்கல. ஆனா உயர உயரப் பறந்தாலும் குருவி பருந்து ஆகாது ப்ரி... சில விஷயங்கள சிலமாதிரிதான் செய்யணும்."

"நோ... நான் ஒத்துக்கமாட்டேன். கம்பெனி சரியில்லை. எங்க பார் ஊழல். இதைசரி செய்ய முதல்ல தேவை நல்ல சூழ்நிலை. கோ ஆபரேஷன். அதுக்கு இந்த நிகழ்ச்சி பயன்படணும். பயன்படத்தான் போகுது..."

-அழுத்தமாக பேசுகிறாள் அந்தபெண். அஜந்தா சிலையாட்டம் இருக்கிறாள். முகத்தில் ஒரு தனி வசீகரம்.

மறக்காமல் ஆஞ்சநேயர் கோவிலுக்குப்போய் வந்திருக்கிறாள். நெற்றி வகிட்டு பாகத்தில் செந்தூரம்.

பிரகாஷ் நின்று ஒருபார்வை பார்த்து விட்டு சிரித்தபடி நழுவுகிறான்.

எதிரில் வருகிறார் மேனேஜர்.

"விஷ்யூ மெனிமோர் ஹேப்பி ரிடர்ன்ஸ் சார்..."

"சந்தோஷம் அப்புறம் மேனேஜர்..." -நடந்தபடியே...

"சொல்லுங்க சார்..."

"எல்லாரும் வந்துட்டாங்களா?"

"வந்துகிட்டேயிருக்காங்க. இந்த நிகழ்ச்சிக்கு அவங்கள எல்லாம் கூப்பிட்டதுல அவங்களுக்கெல்லாம் ஒரே சந்தோஷம் சார்."

"அது இருக்கட்டும். ஆமா நம்ம எம். டி. இன்னிக்கே சார்ஜை என்கிட்ட கொடுக்கப் போறாரா என்ன?"

"என்ன சார் உங்களுக்கு தெரியாதா?"

"இல்ல... என்கிட்ட கேட்டாரு. ப்ரியா இருக்கும்போது நான் எதுக்குன்னு சொன்னேன்."

"அதனாலதான் அம்மாக்கு சார்ஜை தரப்போறாரோ என்னவோ?"

"ஆர்டர் டைப்பாயிடிச்சா?"

"ஆயிடிச்சுசார். உங்களுக்கு ஹானரபிள் பிரசிடென்ட் ரோல்..."

"பிரசிடென்ட்டா...?"

"ஆமாம்சார். புது பதவி."

"அப்ப எனக்கு கீழே தானே ப்ரியா..."

"அப்படிஇல்லசார்... பிசினஸ் மெயின்டனன்ஸ் எல்லாம் அவங்க கன்ட்ரோல். உங்களுக்கு அலங்கார பதவி."

"எதுக்கு இதெல்லாம். மாமா கிட்டவேண்டாம் வேண்டாம்னேன்."

-பிரகாஷ் பொருமலுடன் சமாளித்து வழிகிறான்.

"அப்ப இனிமே நீங்கமேடம் ஆட்டிவைக்கறபடி தான் ஆடணும். அப்படிதானே?" -நைஸாக மேனேஜரை கிண்டிப்பார்க்கிறான்.

"ஏன் சார் அப்படி சொல்றீங்க. நீங்க சொன்னா கேக்க மாட்டேனா என்ன?"

"நான் எந்த அதிகாரமும் இல்லாத அலங்கார தலைவர்தானே?"

"ஆனாலும் எங்க எம். டி. புருஷனாச்சே சார்..."

"அப்ப எனக்குன்னு தனியா மதிப்பு இல்ல..."

"..."

-மேனேஜர் வயிற்றில் வண்டல் மண் பிரளுவதுபோல குறுகுறுப்படைய "என்ன பேசமாட்டேங்கறீங்க?"

"என்ன பேசணும்?"

"ப்ரியா... சின்ன பொண்ணு. அவளுக்கு நல்லது கெட்டது தெரியாது. அவ என்ன சொன்னாலும் என் கிட்ட கேட்காம ஃபைனலைஸ் பண்ணக்கூடாது."



"சரி சார்..."

"நீங்க பெரிய ஜாலும் பார்ட்டி. விட்டுவெச்சிருக் கேன்னா என்னை அட்ஜஸ் பண்ணி நடந்துப்பீங்கன்னு தான்..."

"சரி சார்..."

"நீங்க மட்டும் எப்போதும்போல இருந்துக்கலாம். ஆனா என்வரைல..."

"சார்... என்வரைல நீங்கதான் எம். டி. புரிஞ்சுகிட்டேன். சரிதானே?"

"குட்..." -தோளில் தட்டிக் கொடுத்து விட்டு தனக்கு ஏற்பாடு செய்திருக்கும் அறை நோக்கி நடக்கிறான்.

நிகழ்ச்சிக்கு இன்னும் அரை மணிநேரம் தான் இருக்கிறது.

உள்ளே வேலுப்பிள்ளை! சற்று உம்மென்று...

"என்னப்பா டல்லா இருக்கீங்க..."

"ஒண்ணுமில்ல பிரகாஷ்."

"அப்ப நிறைய இருக்கு."

"அவசரமா அறுபது லட்ச ரூபா வேணும். ஆபீஸ்ல இருந்து அக்கவுன்டன்ட் போன் பண்ணார்."

"எதுக்கு அவ்வளவு பணம்..."

"எதுக்கா... இதுக்குதான் ஆபீசுக்கு ரெகுலரா போகணும் சுறது. அறுபது லட்சம் ஒரு டெண்டருக்கான் டெபாசிட் டுக்கு... சொச்சம் பத்து சம்பளம் போட..."

"போங்கல..."

"ஏற்கனவே அங்க அம்பதுலட்சம் சஸ்பென்ஸ்ல எடுத் திருக்கு. மேனேஜர் சீக்கிரம் கட்டிடுங்கசார் இல்லன்னா என்பொழப்பு போயிடும்னு போன் மேல போன்..."

"என்னப்பா பண்றது? பேசாம எதாவது ஃபைனான்ஸ் காரங்ககிட்ட..."

"எதுக்கு கைல வெண்ணெயை வெச்சுகிட்டு நெய்க்கு அலையறே?"

"என்னப்பா சொல்றீங்க?"

"கொஞ்சம் நெஞ்சுவலி வந்தமாதிரி நான் ட்ராமா போடுறேன். நிச்சயத்த அப்புறம் வெச்சுக்கலாம்னு நீ சொல். காரணம் கேட்டா பிசினஸ்ல திடீர் நெருக்கடி. அறுபது லட்சம் உடனே வேணும். என்ன பண்றதுன்னு சோம்நாத்கிட்ட ஒப்பாரி வை..."

"அவர் தருவாரா...?"

"இப்ப இருக்கற நிலைல தந்துதானே தீரணும். இல்லேன்னா பேபர் முன்னால மானம் போயிடுமே..."

"அப்படியே தந்தாலும் அப்புறமா எனக்கும் இங்க மரியாதை இருக்காதே."

"டேய்... எனக்கு அதெல்லாம் தெரியாது. எதாவது பண்ணு பணத்துக்கு வழியைப் பார்."

-சற்று சடைத்து விட்டு நகம் கடிக்க ஆரம்பிக்கிறார். வேலுப்பிள்ளை.

பிரகாஷ் உடனடியாக இன்டர்காமில் மேனேஜரை பிடிக்கிறான்.

ஓடிவருகிறான்.

"சார்..."

"ஒரு உதவி செய்யணும் மேனேஜர்."

"சொல்லுங்க."

"அறுபது லட்ச ரூபா உடனடியா வேணும்."

"அறுபது லட்சமா?"

"ஆமாம். ரொம்ப அவசரம். கேஷா தான் வேணும்னு இல்ல. நம்ம கம்பெனி செக் போதும்."

"சார்... எம். டி. கிட்ட பேசிட்டீங்களா?"

"இது அவங்களுக்கு தெரியக் கூடாது."



"தெரியாமலா?"

"ஆமாம். அப்புறமா அட்ஜஸ் பண்ணிக்கலாம். ஒரு சில மாசங்கள்ல எனக்கு நிலை சரியாயிடும். தந்திடுறேன். ஓசைப்படாம உள்ள போட்டுடுங்க."

"அப்படி எல்லாம் பண்ண முடியாது சார். அக்கவுண்ட்ஸ் மேனேஜர் சைன் வேற வேணும்."

"அந்த பர்சன்ட் கமிஷன் எடுத்துக்கய்யா..."

"பத்துபர்சன்ட்டே தந்தாலும் இது பயங்கர ரிஸ்க் சார்..."

"நான் இருக்கேன். உனக்கு ஒரு ஆபத்தும் வராம பாத்துக்கறேன்."

"சார்... எம். டி. கிட்ட கேட்டா உங்களுக்கு இல்லைன்னா சொல்லுவாரு."

"அது எனக்கும் தெரியும். நீ, நான் சொல்றபடி செய்யறியா. இல்ல உன் குப்பையை கிளறி உன்னை வீட்டுக்கு அனுப்பவா...?"

"வேண்டாம்சார்... வேண்டாம் சார்... நான் பாத்துக் கறேன். ஆனா உங்க தயவு மட்டும்..."

"என் பேச்சு கேளு. எல்லாம் நான் பாத்துக்கறேன்."

-மேனேஜர் நழுவுகிறார். கதவைத் திறந்து கொண்டு வெளியே தலைகாட்டும் போது தேள் கொட்டு விழுகிறது. அங்கே ப்ரியா!

"மேடம்..."

"போய் செக்க போட்டு எடுத்துகிட்டு வாங்க. போங்க."

மே... மேடம்..."

"போங்க..." -அவளது பார்வை அந்த நபரின் வழுக் கையில் உள்ள ஒரு சில முடிகளைக் கூட உதிரச் செய் கிறது. உள் நுழைகிறாள்.

"ப்ரி..."

"செக் போட சொல்லிட்டேன் பிரகாஷ்."

"ப்ரி..."

"இதுக்கு மேனேஜரை பிளாக்மெயில் பண்ணனுமா பிரகாஷ். எங்கிட்ட கேட்ருக்கலாமே..."

"ப்ரி அது வந்து..."

"ஏதோ இடம் தரலையோ?"

"நான் அதை தான்மா செய்யச் சொன்னேன்."

"நெருக்கலியே விட்டுட்டீங்களே..."

"அம்மாடி எல்லாத்தையும் கேட்டுகிட்டா இருந்தே?"

"ஆமாம். ஒட்டு கேட்க வரலை. வந்த இடத்துலதான் எல்லாம் காதுல விழுந்தது."

"ஸாரிம்மா... வித்தியாசமா எடுத்துக்காதே. திடீர்னு பிசினஸ்ல..."

"இட்ஸ் ஓ. கே. அங்கிள். அறுபது லட்சம் போதுமா இல்ல... இன்னும்..."

"போதும்மா... போதும். போதும்..."

-அவர் எழுந்து நின்று கும்பிடு போட்டபடி வெளிச் சொல்கிறார்.

"என்ன வேலு எதுக்கு இந்த கும்பிடு." என்றபடி உள்நுழைகிறார் சோம்நாத்.

"அது... அது..."

"நான் சொல்றேம்பா. என்னைப்பார்த்தா மகாலட்சுமி மாட்டம் இருக்காம். அதான் கும்பிடுறார்."

"இல்லயா பின்னே... நீ தானேடா இந்த ஃபேக்டரி யோட லட்சுமிதேவி."

"போதும் போதும். நீங்களும் கும்பிட ஆரம்பிச்சுடா தீங்க."

"சரி சரி கிளம்புங்க... டயமாச்சு!"

"எங்க?"



"எங்கவா... ஃபங்ஷனுக்கும்மா எல்லாரும் வந்து உக்காந்தாச்சு. நீங்க ரெண்டு பேரும் வரவேண்டியது தான் பாக்கி."

"அப்பா அந்த நிகழ்ச்சியில ஒரு மாறுதல்ப்பா..." -புதிர் போடுகிறாள் ப்ரியா.

"என்னம்மா..."

"அது என்னென்னு அங்க பார்ப்பீங்க நீங்க" -புதிருக்குள் புதிர். வேலுப்பிள்ளையும், பிரகாஷும் வெள்ளையடித்தது போல வெளிறிப்போயிருக்கின்றனர்.

"ஆமாம் ஏன் நீங்க ஒரு மாதிரியாயிட்டீங்க?" -சோம்நாத் அவர்களின் தடுமாற்றத்தை கேள்விப்படுத்த தவறவில்லை.

"நத்திங்... நத்திங்..."

"அப்ப நடங்க..."

-நடக்கத் தொடங்குகின்றனர்!

## 14

"**நா**மாக எதையும் செய்வதில்லை. செய்ய வைக்கப்படுகிறோம். நாமாக எதையும் நினைப்பதும் இல்லை. நினைக்க வைக்கப்படுகிறோம். எனில் மனிதனுக்கு சுய தன்மையே இல்லையா என்ன? இருக்கிறது. தன்னையறிந்த பிறகே அது அதிகரிக் கும். தன்னையறிய துணை செய்வதே இறைபக்தி யும் சாஸ்திர கடமைகளும்..."

-ஞானரத்னம்

**தொ**ழிற்சாலை மையத்தில் அலங்கார மேடை பூமணம் பருந்து விளையாடிக் கொண்டிருக்கிறது.

டயசில் ப்ரியா, பிரகாஷின் சிரிக்கும் படங்கள்.

மேடை நோக்கி அவரும், பிரகாஷும் நடந்து வரும் போது தொழிலாளர்கள் எழுந்து நின்று கை தட்டுகின்றனர். சோம்நாத்துக்கு மிகப்பெருமையாக இருக்கிறது.

அனைவரும் மேடையை அடைகின்றனர்.

புதிர் போட்ட ப்ரியா நடுநாயகமாக அமர்கிறாள்.

கொஞ்சம் கலகலப்பின்றி 'லப்டப்' என்கிற இதயஒலி காதை அடைக்கும் விதமாக ஒலிக்க அலங்கார நாற்காலியில் பிரகாஷ்.

மைக் முன் இப்பொழுது மேலாளர் போய் நின்று நிகழ்ச்சியை ஆரம்பிக்க முனையும் போதுதான் அந்த் பரபரப்பான ஓட்டம் அங்கு நிகழ்ந்தது.

சரவணன் ஓடிவந்து கொண்டிருந்தான்.

பின்னால் துரத்தியபடி செக்யூரிட்டி கார்டுகள்.

மொத்த தொழிலாளர் கூட்டமும் திரும்பிப்பார்க்கிறது.

மேடையிலும் ஸ்தம்பிப்பு.

ஓடி வருபவன் பரபரப்பு குன்றாதபடி மேடையில் தாவி ஏறுகிறான். சட்டை கிழிபட்டிருக்கிறது. வியர்வை புரண்டு வழிந்திருக்கிறது. தலையிலும் கலைவு.

மூச்சில் பெருமூச்சு...

செக்யூரிட்டி கார்டு பாய்ந்து வந்து அவனை கோழிக்குஞ்சாட்டம் அமுக்கப்பார்க்கிறான்.

ப்ரியா பார்வையாலேயே அதை தவிர்க்க வைக்கிறாள்.

"மேடம்..."

"கீழே இறங்குங்க... அவரை என் துரத்தறீங்க?"

"துரத்தல மேடம். அவர்தான் தடையை மீறி ஓடி வந்தார்."

"என்னய்யா இது கூத்து..." -சோம்நாத் நடுவில் சீறியபடி நுழைகிறார்.



"அப்பா நீங்க சும்மா இருங்க. மிஸ்டர் சரவணன், என்ன இதெல்லாம்?"

"ஒண்ணும் தெரியாத மாதிரி கேக்கறே. என் வாழ்க்கைய அழிச்சிட்டு உனக்கு இங்க நிச்சயதார்த்தமா?"

"என்ன சொல்றீங்க. புரியும்படி சொல்லுங்க."

"எதை சொல்ல... நான் ஊழலுக்கு ஒத்துபோகாததையா? உங்கிட்ட வந்து கம்ப்ளைண்ட் பண்ணினதையா? என்மேல் திருட்டு பழிபோட்டதையா? என்னை போலீஸ் லத்தியால அடிச்சு மிதிச்சதையா?"

இதனால என் அத்தை மகளே என்னை விட்டு விலகிப் போனதையா?

எதைச் சொல்ல... எதைச் சொல்ல சொல்றே?"

"பொறுமை... பொறுமை மிஸ்டர் சரவணன்."

"ப்ரியா என்ன இது... டேய் பாஸ்டர்ட் இறங்குடா கீழ. செக்யூரிட்டி..."

-பிரகாஷ் எழுந்திருந்து சரவணனை நெருங்கி கழுத்தில் கைவைத்து தள்ளியபடி கத்துகிறான்.

மொத்த தொழிலாளர் கூட்டமும், எக்ஸிக்யூடிகம் ஏதோ நாடகம் பார்ப்பது போன்ற பிரமிப்பில் இருக்கும் போதுதான், அந்த நடக்கக் கூடாத சம்பவம் நடக்கத் தொடங்கியது.

பிரகாஷின் பிடியில் இருந்து விலகும் சரவணன் ப்ரியாவை நோக்கி பாய்கிறான்.

இறுக்கி ஒரு அணைப்பு.

பின் சரமாரியாக முத்தங்கள்!

பச்ச்... பச்ச்... பச்ச்... பச்ச்ச்...

சோம்நாத் நெஞ்சை கையில் பிடித்துக்கொண்டு சரிகிறார். சுற்றி நிற்பவர்கள் பிரமையில் இருந்து விடுபட்டு சரவணன் மேல் பாய்கின்றனர்.

அவனிடம் நாடி நரம்பே அறுந்துபோகும் படியான கூக்குரல்.

"பழிவாங்கிட்டேன்... நல்லா பழிவாங்கிட்டேன் இனி நான் செத்தாலும் கவலை இல்லை! என் வாழ்க்கையை அழிச்சவங்கள அசிங்கப்படுத்திட்டேன். இது தப்பு தான்! இருந்தாலும் எனக்கு இதுதான் சரி..."

-அவன் கத்தக் கத்த அவன்மேல் சரமாரியாக குத்தும் உதையும் விழுகிறது.

நடுவில் அஸ்திரம் போல நுழைகிறது ப்ரியாவின் குரல்.

"நிறுத்துங்க!"

## 15

"**கா**ந்தம் இரும்பை கவர்வது போல பலமிக்க எண் தனது நேசமிக்க எண்ணை தேடிப் பற்றும் நடுவில் எதுவும் நிற்க இயலாது. இப்படித்தான் நான்கு ஒன்றையும், ஐந்து இரண்டையும், ஆறு மூன்றையும், ஏழு எட்டையும் தன்னை மீறி நேசிக்கும். உலகில் ஆராய வேண்டிய புதிர் இது!

-எண்கணித சாஸ்திரத்திலிருந்து

**ஆ**ஸ்பத்திரியில் கண் மலர்த்துபவன் அருகே, புன்னகை முகத்துடன் உட்கார்ந்து கொண்டிருக்கிறார் மரகதலிங்கம்.

"மாமா..." -காய்ந்த உதட்டில் குரல் எழுப்பியபடி நிமிரப்பார்க்கிறான்.

"படு... படு... எழுந்திருக்காதே..." -அவர் அவனை படுக்கச் செய்யும் போது அவன் முன் ஹார்லிக்ஸ் டம்ளரை நீட்டுகிறது ஒரு பெண் கரம்.

"மேடம்!"



". . ."

"நீங்க... நீங்க..."

"முத்தத்தை அத்தனை பேர் எதிர்க்க கொடுத்துட்டு வந்து இங்க படுத்துட்டா விட்ருவேனா...?"

"... மேடம்."

"மேடம் இல்ல. ப்ரியா. உங்களுக்கு ஏற்பட்டிருக்கற நஷ்டங்களுக்கு காம்பன்ஷேஷன் தர வந்துருக்கற ப்ரியா."

"நான் சொல்லல சரவணா உனக்கு யோககாலம்னு..." -மாமா சந்தோஷ சிலிர்ப்பை நடுவில் திணிக்கிறார்.

"இவருக்கு யோக காலமோ இல்லையோ... நிச்சயமா என் கம்பெனிக்கு இனி யோக காலம்தான்!"

"என்னம்மா புதிர்போடுறே. உன் முடிவை அவன்கிட்ட தெளிவா சொல்லும்மா. நிச்சயதார்த்தம் நின்னு போனதோ நீ மேடையிலேயே மேனேஜரை டெர்மினேட் பண்ணினதோ, பிரகாஷை போலீஸ்ல பிடிச்சு கொடுத்ததோ எதுவுமே இவனுக்கு தெரியாது. அத முதல்ல சொல்லு..."

"மாமா, ப்ரியா..."

"டென்ஷனாகாதே... என் லைஃப்ல தெலுங்கு சினிமா காட்சி மாதிரி விபத்து நடந்து போச்சுன்னு சொல்லி அழுதியே -அதே ஸ்டைல்ல உனக்கு மறுவாழ்வும் கிடைச்சிருக்கு. பார்த்தியா.

கௌசல்யா போனா என்ன... ப்ரியா வந்துட்டா சரவணா."

"என்ன மாமா எல்லாம் ஒரே மாயமா இருக்கு..."

"அதானே உன் ஜாதகத்தோட ஸ்பெஷல்."

"திரும்ப ஜாதக பேச்சா... ஐய்யோ..."

"டேய்... நான் சொன்னபடி நடந்துருக்கா இல்லியா...?"

-அவன் அவரை பனித்த விழிகளோடு பார்க்கிறான்.

"மரகதலிங்கம் சார்... நீங்க என்ன சொன்னீங்களோ எனக்கு தெரியாது. என் ஜாதகத்தை கூட ஒருத்தர் பார்த்துட்டு நான் அப்பாவை பிரிஞ்சுடுவேன். அப்படி இப்படின்னு சொல்லியிருந்தாரு.

ஆகையால ஜாதகம் ஜோசியம்னு எதையாவது சொல்லி நல்ல எண்ணம், நோக்கம் இவைகளால் ஒன்னு சேர்ந்துருக்கற எங்க இணைப்பை ஜாதகத்துக்கு சாதக மாக்கிடாதீங்க... ப்ளீஸ்...

-ப்ரியா கிட்டத்தட்ட சரவணன் போலவே பேசுகிறாள்.

அவர் சிரிக்கிறார்.

"என்ன சிரிக்கிறீங்க...?"

"ஒண்ணுமில்லம்மா. நீ சொல்றதெல்லாம் சரி."

"உடனே பல்டியா?"

"இல்லம்மா... இதுக்குபேர் அனுசரிப்பு..."

"அப்போ நீங்க மனப்பூர்வமா சொல்லலை..."

"சொல்லலை. சொல்லவும் முடியாது."

"இது விஞ்ஞான யுகம்."

"அதனால... இவன் அம்மா இவனுக்கு அக்கா ஆயிடு வாளா... இல்ல நான் தான் தாத்தா ஆயிட முடியுமா...?"

"இது விதண்டாவாதம்."

"சரிம்மா. அப்படியே இருக்கட்டும். நான் கிளம்பறேன். கவனமா பாத்துக்கோ. கொஞ்ச நேரத்துல இவன் அம்மா தங்கை எல்லாம் வந்துடுவாங்க. உன்னை பார்த்தா சந் தோஷப்படுவாங்க."

-மரகதலிங்கம் கிளம்புகிறார். சரவணன் ப்ரியா பக்கம் திரும்புகிறான். அவள் கவர்ச்சியா சிரிக்கிறாள்.

"ப்ரியா நீங்க எங்க... நான் எங்கே?" அவள் -உடனே அவன் வாயை பொத்துகிறாள்.

"கன்சர்வேடிவா பத்தாம்பசலியா முத்தம் கொடுத்துட் டீங்க. இனி நீங்க தான் என் புருஷன்னு உங்களை



தேடி வரலை. உங்க நேர்மை, அந்த துணிவு, போராட்ட குணம் -எல்லாத்துக்கும் மேல என்னை போலவே கால நேரங்களை நம்பாத, தன்னை நம்பற அந்த கேரக்ட் ரைசேஷன்.

அதுமட்டுமில்ல...

எப்பவும் காதலர்கள்தான் பிரிவை நினைச்சு வருந்து வாங்க. ஒரு அப்பா... தன்னோட பொண்ணு பிரியறத நினைச்சு வருத்தப்படறது... சென்டிமென்டா நம்ப குடும் பங்கள்ல நடக்கும். ஆனா, என் அப்பா, இந்த சொத்து சுகத்துக்காக, 'என்னை பிரிஞ்சிடாதே பிரிஞ்சிடாதே' ன்னு புலம்புனாரு. அது மட்டுமில்லாம சொந்த வீட்லயே திரு டற மாதிரி, எனக்குத் தெரியாம கம்பெனி சொத்துக்களை ஒதுக்க ஆரம்பிச்சாரு.

இப்படிப்பட்ட உலகத்துல, உங்கள மாதிரி நேர்மை யானவர் எனக்கு அதிசயமா தெரிஞ்சாரு. அந்த நேர்மை யானவரை மதிக்கற விதமா, மேனேஜராக்கலாம்னு இருந் தேன். இப்போ, ப்ரியா ஃபேஷன்ஸ் எம்.டி.யே நீங்கதான்.

அப்பாவையும் சரி, ப்ரியா ஃபேஷன்ஸையும் சரி, இனி உங்களையும் சரி... என்னால், எப்பவுமே பிரிய முடியாது.

உங்க இணைப்பு கம்பெனிக்கு பலம் சேர்க்கும். உங்களுக்கு சம்மதமா?"

-அருகில் அமர்ந்து காதோரமாக இதம் பதமாக மிக மென்மையாக கேட்கிறாள். அவன் விழியால் சம்மதம் தருகிறான்.

இது கேரக்டர் சர்ப்பா... இல்லை மாமா நினைப்பது போல ஜாதக பலனா?

எது நிஜம்?

முற்றும்